CASH FOR GOLD
R-GOLD
EXCHANGE
Mob: 93457 93457

திகோவை ஹெரால்டு
THE KOVAI HERALD

CASH FOR GOLD
R-GOLD
EXCHANGE
Mob: 93457 93457

RNI.Regn.No.TNBIL/2018/76255 | Postal No: CB/154/2024-26 | Kovai / Tirupur | thekovaiherald.co.in | facebook.com/Thekovaiherald
Volume 8 | Issue 24 | English & Tamil Weekly | 9.11.2025 SUNDAY | 8 Pages | Price Rs.3/-

### வாக்காளர் பட்டியல் திருத்த பணி

# முத்தண்ணன், வாலாங்குளம் குளக்கரையில் வசித்தவர்கள் நிலை என்ன?

திகோவை ஹெரால்டு



முத்தண்ணன் குளக் கரையில் வீடு கட்டி வசித்தவர்கள், தற்சமயம் எந்தெந்த இடங்களில் வசிக்கிறார்களோ அப்பகுதிக்கு நேரில் சென்று விசாரணை நடத்தி, வாக்காளர் இடப்பெயர்ச்சி படிவம் பெற்ற பின்பு, பட்டியலில் இருந்து பெயர்களை நீக்க, கலெக்டர் பவன்குமார் உத்தரவிட்டுள்ளார்.

கோவை மாநகராட்சி பகுதியில், நீர் நிலைகளை ஆக்கிரமித்து வீடுகள் கட்டி வசித்து வந்தவர்களுக்கு, தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியத்தின் அடுக்குமாடி குடியிருப்பு களில் மாற்று வீடுகள் வழங் கப்பட்டன. நீர்நிலைகள் அருகேயிருந்த வீடுகள் அகற்றப்பட்டன.

முத்தண்ணன் குளத்தில், 3,000க்கும் மேற்பட்ட வீடுகள் இருந்தன. அங்கு வசித்தவர்களுக்கு வீர கேரளம், மலுமிச்சம்பட்டி, கோவைப்புதூர் அண்ணா நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு மாற்று வீடு வழங்கப்பட்டது. பின்னர், 'ஸ்மார்ட் சிட்டி' திட்டத்தில், குளக்கரை மேம்படுத்தப்பட்டது.

முத்தண்ணன் குளக் கரையில் வசித்தவர்களுக்கு கோவைவடக்குதொகுதியில் மொத்தம், 3,013 ஓட்டுக்கள் உள்ளன. தற்போது வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி துவங்கியுள்ளது. இதன்படி, நிரந்தரமாக இடம் பெயர்ந்தவர்களின் ஓட்டுக்களை பட்டியலில் இருந்து நீக்க வேண்டும். அப்படி, நீக்குவது தொடர்பாக, மாவட்ட தேர்தல் அதிகாரியான, கலெக்டர் பவன்குமார் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

அவர், முத்தண்ணன் குளக்கரை பகுதியை, நேரில் ஆய்வு செய்தார். மாநகராட்சி மேற்கு மண்டல உதவி கமிஷனர் துரை கண்ணன் மற்றும் தேர்தல் பிரிவினர், ஓட்டு விபரங்களை விளக்கி கூறினர். பின்பு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளுக்கு நேரில் சென்று, அங்கு வசிப்போரிடம் இருந்து இடப்பெயர்வுக்கான படிவத்தை பெற்று, அந்த தொகுதிக்கான பட்டியலில் சேர்க்க வேண்டும். அதன் பிறகே, வடக்கு தொகுதியில் உள்ள முத்தண்ணன் குள வாக்காளர்களின் பெயர்களை நீக்க வேண்டுமென கலெக்டர் அறிவுறுத்தினார்.

வாலாங்குளத்தின் கரையில் வசித்தவர்கள் அம்மன் குளத்துக்கும், உக்கடம் ஜி.எம். நகர், கெம்பட்டிகாலனி உள்ளிட்ட பகுதிகளில் வசித்தவர்கள் கழிவு நீர் பண்ணை வளாகத்துக்குள் உள்ள குடியிருப்புகளுக்கும் இடம் பெயர்ந்திருக்கின்றனர். குனியமுத்துார் சுண் ணாம்புகாளவாய்பகுதியில் வசித்தவர்கள் வெள்ளலூ ருக்கு மாற்றப்பட்டுள்ளனர். இவர்களுக்கான ஓட்டுரிமை எந்தெந்த பகுதியில் இருக்கிறது என்பதையும் ஆய்வு செய்து, அப்பகுதிக்கான சட்டசபை தொகுதிகளில் இணைக்க, தேர்தல் பிரிவினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புகளுக்கு நேரில் சென்று, அங்குள்ள அனைத்து வீடுகளிலும் வசிப்போரிடம் ஆவணங்கள் பெற்று, அந்தந்த ஓட்டுச்சாவடிகளில் சேர்க்க வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்துள்ளது.

# ஜி.கே. மணியை தோற்கடிக்க சவுமியாவை களமிறக்கும் அன்புமணி

திகோவை ஹெரால்டு

சட்டசபை தேர்தலில், பென்னாகரம் தொகுதியில் மனைவி சவுமியாவை போட்டியிடவைக்க, பா.ம.க., தலைவர் அன்புமணி முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

'பசுமைதாயகம்' அமைப்பின் தலைவராக இருந்த சவுமியா, கடந்த லோக்சபா தேர்தல் வாயிலாக அரசியல் களத்திற்கு வந்ததும், பா.ம.க., நிறுவனர் ராமதாஸ் குடும்பத்தில் பிரச்னை ஏற்பட்டது. அன்புமணியை கட்சியிலிருந்து நீக்கியதோடு, தன் மூத்த மகள் ஸ்ரீகாந்தியை அரசியலுக்கு அழைத்து வந்து செயல் தலைவராக, ராமதாஸ் நியமித்துள்ளார்.

சமீபத்தில் பேட்டியளித்த ராமதாஸ், 'அன்புமணியிடம் இருப்பது கட்சி அல்ல. அது ஒரு கும்பல். அந்த கும்பலுக்கு அன்புமணியும், சவுமியாவும் தான் தலைவர்'

இதுவரை, மகனை மட்டும் விமர்சித்த ராமதாஸ், இப்போது மருமகள் சவுமியா தான் அனைத்து பிரச்னைக்கும் காரணம் என்பது போல குற்றஞ்சாட்டியது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு, ராமதாஸின் மகள் ஸ்ரீகாந்தி தான் காரணம் என, அன்புமணி தரப்பினர் கூறுகின்றனர். மேலும்,



▶ ஜி.கே.மணி



▶ சவுமியா அன்புமணி

சட்டசபை தேர்தலில் மகள் ஸ்ரீகாந்தியை, தர்மபுரி தொகுதியில் நிறுத்த ராமதாஸ் முடிவு செய்துள்ளார்.

அதே நேரத்தில் சவுமியாவை ராமதாஸ் விமர்சிக்க துவங்கியதால், சவுமியாவை எம்.எல்.ஏ., வாக்க அன்புமணி முடிவு செய்துள்ளார்.

கடந்த, 2014 - -2019 வரை, தர்மபுரி எம்.பி., யாக இருந்த அன்புமணி, 2024 லோக்சபா தேர்தலில், இந்த தொகுதியில், சவுமியாவை நிறுத்தினார். அ.தி.மு.க., இல்லாமல் பா.ஜ., உடன் மட்டுமே கூட்டணி அமைத்த நிலையில் 21,300 ஓட்டு வித்தியாசத்தில் சவுமியா தோல்வியடைந்தார். எனினும், தர்மபுரி தொகுதிக்குட்பட்ட, பென்னாகரம் சட்டசபை தொகுதியில், தி.மு.க., வேட்பாளரை விட, சவுமியாவுக்கு 11,585 ஓட்டுகள் அதிகம் கிடைத்தது.

எனவே, பென்னாகரத்தில் சவுமியா போட்டியிட்டால் எளிதில் வெற்றி பெறலாம் என அன்புமணி கணக்கு போடுகிறார். தற்போது, பென்னாகரம் எம்.எல்.ஏ., வாக, பா.ம.க., கவுரவத் தலைவர் மணி இருக்கிறார்.

தனக்கு எராமதாஸ் உடனான பிரச்னைக்கு மணி தான் காரணம் என, கருதுவதால், அவரை தோற்கடிக்கவும், இந்த முடிவை அன்புமணி எடுத்ததாக தெரிகிறது.

### ஜவஹர்லால் நேரு பொன்மொழிகள்



- உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியும் உங்களுக்கு ஒரு புது வாய்ப்பு.
- தடைகளை கண்டு அஞ்சாமல், அதை எதிர்த்து போராடி வெற்றி பெறுங்கள்.
- சவால்களை ஏற்றுக்கொள்ளுங்கள், அப்போதுதான் உங்களின் திறமைகளை நீங்கள் கண்டறிய முடியும்.
- வெற்றி பெறுபவர்கள் எப்போதும் வெல்வார்கள், ஆனால் தோல்வியுற்றவர்கள் எப்போதும் தோல்வியடைவார்கள்.

LAKSHAKA TEX LIMITED

# ஜெம் மருத்துவமனை தலைவர் டாக்டர் பழனிவேலுவுக்கு ஜப்பானின் உயரிய கௌரவம்

திகோவை ஹெரால்டு




உள்நாட்டு மற்றும் சர்வதேச அளவில் நுண்துளை அறுவை சிகிச்சை துறையில் புதிய மாற்றங்களை உருவாக்கிய ஜெம் மருத்துவமனை தலைவர் பேராசிரியர் டாக்டர் சி.பழனிவேலு, உலக மருத்துவ துறையின் மிக உயரிய அங்கீகாரங்களில் ஒன்றான ஜப்பான் நாட்டின் தொராசிக் அறுவை சிகிச்சை சங்கத்தின் (JATS) வெளிநாட்டு கௌரவ உறுப்பினர் பட்டத்தை பெற்றுள்ளார்.

ஒசாகாவில் அக்டோபர் 23 முதல் 28 வரை நடைபெற்ற ஜேட்ஸ் 78வது ஆண்டு அறிவியல் மாநாட்டில் அவருக்கு இந்த கௌரவம் வழங்கப்பட்டது. உணவுக்குழாய் புற்றுநோய்க்கான அறுவைசிகிச்சை நடைமுறைகளில், குறிப்பாக குப்புற நிலையில் செய்யப்படும் உணவுக்குழாய் அகற்றல் என்ற நவீன நுட்பத்தை உலகில் முதன்முதலாக அறிமுகப்படுத்தி செயல்படுத்தியதற்காக டாக்டர் பழனிவேலுவுக்கு இந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அறுவைசிகிச்சை முறை உயிருக்கு ஆபத்தை குறைத்து சுவாசச் சிக்கல்கள்களை சீர்படுத்துவதோடு குறைந்த நாட்களில் நோயாளிகளை குணமடைய வைத்து விடும். தற்போது, இந்த மருத்துவசிகிச்சை முறை, உலகின் பல முன்னணி மருத்துவமனைகளில் பயன்பாட்டில் உள்ளது.

கிண்டாய் பல்கலைக்கழக பேராசிரியரும் ஜேட்ஸ் மாநாட்டு தலைவரான தகுஷி யசுடா, "உணவுக்குழாய் புற்றுநோய்க்கான உலகளாவிய அறுவைசிகிச்சை முறையை மாற்றியமைத்தவர் டாக்டர் பழனிவேலு. அவரின் சிகிச்சை நுட்பம் ஜப்பானில் மட்டுமல்லாது பல நாடுகளில் அறுவை சிகிச்சை நடைமுறையாக மாறியுள்ளது" என பாராட்டினார். இந்த கௌரவத்தை பெற்ற டாக்டர் பழனிவேலு, "இந்த அங்கீகாரம் எனக்கு மட்டுமானதல்ல; ஜெம் மருத்துவமனை குழுவின் ஒற்றுமை, அர்ப்பணிப்பு மற்றும் மக்களுக்கு நாம் செய்யும் சேவைக்கான அங்கீகாரம். உலகில் எங்கு இருந்தாலும், ஒரு நோயாளி வலியின்றி வாழ உதவுவது தான் அறுவைசிகிச்சை நிபுணரின் உண்மையான வெற்றி" என தெரிவித்துள்ளார்.



சமூக சேவையிலும் டாக்டர் பழனிவேலு ஈடுபட்டு வருகிறார். இவரின் ஜெம் மெடிக்கல் அறக்கட்டளை இதுவரை 65 இலவச மருத்துவ முகாம்கள் நடத்தி, 3,485க்கும் மேற்பட்ட இலவச லேப்ரஸ்கோபிக் அறுவைசிகிச்சையை செய்துள்ளது. அதோடு, 47,000க்கும் மேற்பட்ட பொருளாதாரத்தில் பின்தங்கிய நோயாளிகளுக்கு உதவிக்கரமாக இருந்துள்ளது. டாக்டர் பழனிவேலுவின் கண்டுபிடிப்பு, ஆய்வு, மற்றும் சமூக அர்ப்பணிப்பு, இந்தியாவை சர்வதேச மருத்துவத்துறையில் நம்பிக்கையுடனும் பெருமையுடனும் முன்னெடுத்து செல்ல உதவும் என்றால் அது மிகையல்ல.



# Getting Distracted? Just Get Involved!

THE KOVAI HERALD



Q:Namaskaram Sadhguru. Every time I plan to do any work or start any work, I will be like, "Okay, I'm gonna do this, no distraction," but somehow I get distracted by food, movies, or whatever reason it is. How to be focused all the time? You say, "Simply sit," but I find it very hard.

Sadhguru: Simply sitting may not be in you right now. Do not try to concentrate and focus. It is not a pleasant experience. Just get involved. For example, when you are watching a movie, it is only a play of two-dimensional light and sound. Nothing so significant. But when you are really watching, it becomes larger than life. People love Rajinikanth more than they love their family. They have never seen the guy and he does not look like that, but he has become larger than life for them because of their involvement. All that happened was that they got involved. Because of this, though he is not a three-dimensional human being, he is just play of sound and light, people started loving him more than anything.

Something becomes fantastic not because it is. Everything is fantastic or nothing is fantastic in the universe. For instance, someone is looking at an atom. They spend their entire life looking at one silly atom. But because of their involvement, that single atom becomes so fantastic! So much life to see all around, but someone is looking through the microscope at one single atom, or a bacterium for that matter. Because of their involvement, bacteria become so fantastic.

Do not try to concentrate. Do not try to focus. If you bring involvement, something becomes fantastic in your experience. Then I do not have to tell you, "Be focused on it." The problem is how to get you out of it. Unfortunately, the world has become goal-oriented. They want mangoes, but they do not like the tree. It does not work like that. If you get involved with the tree and nourish it, mangoes will fall on your head anyway. You do not have to say, "Mangoes, please come. Be sweet, be sweet, be sweet." If you nourish the tree, mangoes will fall and they will be sweet. Similarly, focus and concentration are consequences of involvement. But people are trying to have the fruit without the tree, and it is freaking the hell out them. Trying to concentrate on something with which they are not involved is just killing people.

# KMCH receives Deloitte's Prestigious Best Managed Companies - Jury Special Recognition Award

THE KOVAI HERALD



Dr.Arun N Palaniswami, Executive Director, and Sivakumaran Janakiraman, Chief Operating Officer (COO), KMCH, receiving the Deloitte's Prestigious "Best Managed Companies - Jury Special Recognition "Award at the event in Mumbai

Kovai Medical Center and Hospital (KMCH) has been honoured with the highly coveted "Best Managed Companies - Jury Special Recognition Award" from Deloitte Private. The prestigious honour was presented at a ceremony in Mumbai on October 15, 2025.

The recognition from Deloitte, one of the world's most respected global organizations, serves as a benchmark of trust and operational excellence. Out of 25 companies shortlisted, only 8 companies were recognized in the best managed companies awards. 6 won the award and 2 were recognized for special jury recognition. The award was officially received by Dr. Arun N Palaniswami, Executive Director, and Sivakumaran Janakiraman, Chief Operating Officer (COO), KMCH, during the gala event held in Mumbai.

Commenting on the landmark achievement Dr. Nalla G. Palaniswami, Chairman and Managing Director, KMCH, emphasized the collective effort behind the award, "This is not just a recognition of KMCH, but of the dedication of every staff member who upholds our commitment to ethical and compassionate healthcare.

To be the first hospital in India to achieve this special recognition from Deloitte, validates our unwavering vision of combining world-class infrastructure with deep-rooted community trust and the highest standards of corporate governance. This award inspires us to continue shaping the future of healthcare."

## Special Chennai-Kollam Sabarimala Season Train via Podanur Announced

Ahead of the Sabarimala pilgrimage season, a special train service will be operated between Chennai and Kollam via Podanur, according to a press release issued by the Salem Railway Division.

To facilitate pilgrims, the Chennai EgmoreKollam special express (Train No. 06111) will run on Fridays from November 14 to January 16, 2026. The train will depart Chennai Egmore at 11.55 p.m. and reach Kollam at 4.30 p.m. the following day.

In the return direction, the Kollam Chennai Egmore special (Train No. 06112) will run on Saturdays from November 15 to January 17, 2026. The train will depart Kollam at 7.35 p.m. and arrive at Chennai Egmore at around 12 midnight the next day. The special service will halt at key stations including Kayamkulam, Chengannur, Tiruvalla, Kottayam, Ernakulam Town, Aluva, Thrissur, Palakkad, Podanur, Tiruppur, Erode, Salem, Jolarpettai, Katpadi, Arakkonam, Tiruvallur, and Perambur. Railway officials stated that this arrangement has been made to provide convenient travel options for devotees heading to Sabarimala during the pilgrimage season.

# Rise of Artificial Super Intelligence Sparks Global Alarm Over Human Jobs and Safety

THE KOVAI HERALD

K.Abirami



The rapid evolution of Artificial Intelligence (AI) has triggered widespread debate around the world. Once seen as a futuristic concept, AI is now deeply integrated into daily life — simplifying tasks while simultaneously threatening millions of human jobs. Experts warn that while AI's growth is remarkable, its next stage — Artificial Super Intelligence (ASI) — could surpass human intelligence itself, posing unprecedented risks.

AI technology has already revolutionized industries, automating complex processes and improving efficiency. However, its rapid adoption has also led to large-scale job displacement. While technology leaders claim AI will create new opportunities, evidence of such growth remains scarce. American tech companies are now advancing toward Artificial Super Intelligence, a form of AI that not only learns autonomously but can also improve itself at extraordinary speed.

ASI refers to a system capable of outperforming human beings in every intellectual domain — creativity, reasoning, problem-solving, planning, and emotional understanding. In other words, it is an intelligence beyond human comprehension. Experts fear that once developed, such systems could operate independently, making decisions humans cannot predict or control.

Prominent figures in the global tech industry, including AI "godfathers" Geoffrey Hinton and Yoshua Bengio, along with Apple's Steve Wozniak, Virgin Group's Richard Branson, and Prince Harry, are among 800 signatories urging a halt to ASI research and development. In their joint statement, they warned that unchecked AI advancement could jeopardize human freedom and even threaten the survival of humanity itself.

According to the statement, ASI could quickly become uncontrollable — operating autonomously and deviating from human values, with catastrophic consequences. Hinton cautioned that humans may ultimately lose control over these highly intelligent systems, which could evolve beyond human oversight.

AI has already begun to replace white-collar jobs and repetitive roles in several sectors. Companies like Amazon have started integrating AI systems and robots in warehouses, reducing the need for human employees. Analysts predict that with the rise of ASI, large-scale unemployment may become inevitable, particularly affecting middle- and lower-income workers.

Furthermore, global power dynamics could shift dramatically. The nations or corporations controlling ASI would wield immense authority and economic power, leading to potential inequality and exploitation.

In light of these concerns, experts and industry leaders are calling for governments to pause ASI research and establish strong international regulations before further development continues. They emphasize the urgent need for a global policy framework to ensure AI innovation remains ethical, transparent, and under human control.

## District-Level Private Sector Job Fair in Coimbatore on November 29

Coimbatore District Collector Pavan Kumar K. Giriyappanavar has announced that a district-level private sector job fair will be held in Coimbatore on November 29. According to a press release issued by the Collector, the event is being organized by the Coimbatore District Employment and Career Guidance Centre.

The job fair will take place at Kongunadu Arts and Science College, located near Kavundampalayam Mills on Mettupalayam Road. More than 250 companies from Coimbatore, Mettupalayam, and nearby regions are expected to participate and recruit eligible candidates. Individuals who have completed Class 8, Class 10, Plus Two, undergraduate and postgraduate degrees, diploma holders, nursing graduates, and engineering graduates across various fields are eligible to participate in the fair. Candidates are advised to attend the event with their resume and copies of educational certificates. Job seekers may register online or contact the district employment office at 0422-2642388 or 94990-55937 between 10 a.m. and 6 p.m. Similarly, private organizations interested in participating may register online or contact 80563-58107 for further details.

## Lung Function Test Camp Conducted for Coimbatore City Police Personnel



A special lung function screening camp for police personnel was conducted in Coimbatore. The camp commenced with Coimbatore City Police Commissioner Saravana Sundar attending as the chief guest and Deputy Commissioner of Police (Traffic) Ashok Kumar as the guest of honour.

Rotary Club Ikon President Jaya Murali welcomed the gathering and highlighted the objective of the initiative, emphasizing the importance of monitoring lung health among police personnel due to their demanding work environment. She further announced that the Rotary Club would organize additional health camps in the future, including screenings for diabetes, hypertension, and blood-related conditions, to support the overall well-being of the police force.

Project Chair Dr. Padmaja explained the significance of lung function testing and its role in early detection of respiratory issues. The Rotary Ikon Secretary delivered the vote of thanks.

Approximately 250 police personnel took part in the camp. The first test of the day was conducted for the Coimbatore City Police Commissioner himself, marking the official commencement of the health screening program.

FOR NEWS Publication
9244317182
04223147962

# Participatory Rural Appraisal Programme Conducted at Chettikkapalayam

THE KOVAI HERALD



Students from the Amrita School of Agricultural Sciences conducted a Participatory Rural Appraisal (PRA) programme in Chettikkapalayam Panchayat, Coimbatore district, as part of their Rural Agricultural Work Experience (RAWE) training.

The activity aimed to enable the village community to identify, analyze, and plan solutions for local issues. During the programme, students used PRA tools such as the Problem Tree and Matrix Ranking to study various challenges faced by the farmers. Through the assessment, they gathered valuable insights about major crop pests and diseases affecting agricultural productivity in the region. Farmers actively participated in the session and appreciated the students' efforts in understanding field-level issues and engaging with the community.

The programme was carried out under the guidance of College Dean Dr. Sudheesh Manalil and faculty members. The student team included Priyanka S., Priyanka K., Gayathri M., Anjana, Navami N., Abitha R., Nandhan B., K. S. Hari Shankar, Sneha S., and Preethika M.

The PRA exercise concluded successfully, reinforcing the importance of collaborative rural development and experiential learning in agricultural education.

## Three Day Dance Festival at Bharatiya Vidya Bhavan



N.V.Nagasubramaniam, Chairman, Bharatiya Vidya Bhavan, Coimbatore Kendra, conferred the 'Nritya Ratna' Award on eminent dancer Padma Murali, Founder Director, Padmalaya Dance Foundation, Bengaluru at the 3 day Dance Festival of Bharatiya Vidya Bhavan, Coimbatore Kendra. Lakshmi Shree Vikranth, Shara Sivithkumar & Bharathi Venkat presented a dance programme which was followed by a dance recital by Nrityarpana School of Bharatanatyam.

# Two New Rest Rooms Opened for Delivery Workers in Coimbatore




THE KOVAI HERALD

Two new rest rooms have been set up in Coimbatore for delivery workers engaged in delivering household goods and food items, in order to provide them with a comfortable space to rest during work hours. The initiative has been implemented by the Labour Welfare Department and was announced earlier in the Legislative Assembly.

In the first phase, a rest room has been constructed at R.S. Puram at a cost of ₹24 lakh, and another near Gandhipuram Town Bus Stand at a cost of ₹16.82 lakh. Both facilities are equipped with essential amenities required for delivery workers to take breaks comfortably.

The rest rooms include seating arrangements, tables, electric fans, mobile charging points, water coolers, wash basins, and toilet facilities. Additionally, the R.S. Puram rest room has been provided with air-conditioning.

The rest room at Gandhipuram was inaugurated by Coimbatore Member of Parliament Rajkumar, District Collector Pavan Kumar Giriyappanavar, and City Corporation Commissioner Sivaguru Prabhakaran.

Public and labour associations have welcomed the initiative, stating that it will greatly benefit the large number of delivery workers operating across the city.

# மருதமலையில் 184 அடி முருகன் சிலை சென்னை உயர் நீதிமன்றம் சராமரி கேள்வி

கோவை வனப்பகுதியில் உள்ள யானைகள் வழித்தடமான மருதமலை, சுற்றுச்சூழல்ரீதியாகமுக்கியமான பகுதி. நீலகிரி வனப்பகுதியில் இருந்து பிற பகுதிகளுக்கு செல்ல யானைகள்,இந்தபாதையாக பயன்படுத்துகின்றன.

இந்த பகுதியில், 110 கோடிரூபாய்செலவில், 184 அடி உயரத்துக்கு முருகன் சிலை அமைக்கப்பட உள்ளது. இதை எதிர்த்து, சென்னை கோட்டூர் கார்டன் பகுதியை சேர்ந்த விலங்குகள் நல ஆர்வலர் எஸ்.முரளிதரன் வழக்கு தொடர்ந்தார்.

இந்த மனு, நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரத சக்கரவர்த்தி அடங்கிய சிறப்பு அமர்வு முன் கடந்த 7ம் தேதி விசாரணைக்கு வந்தது. அப்போது, அறநிலையத்துறைதரப்பில் மூத்த வழக்கறிஞர் ஆர். சண்முகசுந்தரம், சிறப்பு பிளீடர் அருண் நடராஜன் ஆஜராகி, அறிக்கை தாக்கல் செய்தனர்.

அதில், 'மலைப் பகுதி பாதுகாப்பு ஆணையத்திடம், 184 அடி உயர முருகன் சிலை அமைப்பதற்கு,கடந்தமாதம் 9ல் தடையில்லா சான்று பெற விண்ணப்பிக்கப் பட்டுள்ளது. இப்பகுதியில் சிலைஅமைவதால்,யானை வழித்தடங்களுக்கு எவ்வித பாதிப்பையும்ஏற்படுத்தாது' என கூறப்பட்டுள்ளது.

பின்னர், நீதிபதிகள் கூறியதாவது, '' சிலை அமைவதற்கு, இந்த நீதிமன்றம் தடையாக இருக்காது. வனப்பகுதியில் இவ்வளவுஉயரத்தில்சிலை அமைக்கப்படும்போது, அதைபார்வையிடஎத்தனை பேர் வருவார்கள். எவ்வளவு கார்கள் வரும். அவற்றை எங்கு நிறுத்துவீர்கள்? மக்களுக்கு தேவையான குடிநீர், கழிப்பறைபோன்ற வசதிகள் செய்ய, என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. மக்கள் விட்டு செல்லும் குப்பை எவ்வாறு அகற்றப்படும்? அங்கு சேரும் திடக்கழிவுகளால், நாளடைவில் வனமே அழிந்து விடாதா- இந்த திட்டத்தால், வன விலங்குகளுக்கு, எந்த வித தொந்தரவும் ஏற்படக் கூடாது.

பல்வேறு காரணங்களால் வனப்பகுதிகள் சுருங்கி வருகின்றன. இதன் காரணமாக, மனித- - விலங்குகள் மோதல் நிகழ்வுகளும் நடக்கின்றன.

இவ்வாறு நீதிபதிகள் கூறினர்.

இதற்கு பதிலளித்த மூத்த வழக்கறிஞர் ஆர்.சண்முகசுந்தரம், ''நீதிமன்றம் கோரிய விபரங்களுடன் விரிவான அறிக்கையை, அடுத்த விசாரணையின்போது தாக்கல் செய்கிறோம்,'' என்றார்.

இதை ஏற்ற நீதிபதிகள், 'கூட்டநெரிசல்மேலாண்மை நிர்வகிக்கும் முறை, சிலை அமைய உள்ள சரியான இடம், பார்க்கிங் போன்ற அடிப்படை வசதிகள் ஆகியவை குறித்த முழு விபரங்களுடன், அறநிலையத் துறை விரிவான அறிக்கை தாக்கல் செய்யவேண்டும். அதன்பின், சம்பந்தப்பட்ட பகுதியில் சுற்றுச்சூழல் தாக்கமதிப்பீடுதொடர்பாக, சம்பந்தப்பட்ட நிபுணர்கள் ஆய்வு செய்வது குறித்து, இந்த நீதிமன்றம் முடிவு செய்யும்' என உத்தரவிட்டு, விசாரணையை டிச., 5க்கு தள்ளிவைத்தனர்.

மேலும், மறுஉத்தரவு வரும் வரை , பணிகள் தொடங்கவும் நீதிபதிகள் தடை விதித்தனர்.

# சட்டமன்ற தொகுதி முகவர்கள் ஆலோசனை கூட்டம் எம்.எல்ஏ. பி.ஆர்.ஜி..அருண்குமார் தலைமையில் நடந்தது




கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதி முகவர்கள் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கிய கோவை புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் பி ஆர் ஜி.. அருண்குமார், மேட்டுப்பாளையம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒ .கே .சின்ராஜ், மாநில அம்மா பேரவை இணை செயலாளர் முகில், கோவை மண்டல தலைவர் விக்னேஷ், தகவல் தொழில் நுட்ப பிரிவு பொறுப்பாளர் சஞ்சீவ், நிர்வாகிகள், ஒன்றிய , பகுதி, வட்ட செயலாளர்கள், பாக முகவர்கள் கலந்து கொண்டனர்.

# பாஜகவில் இணைந்த மாற்று கட்சியினர்



பொள்ளாச்சி கோட்டூர் பேரூராட்சியில் மாற்றுக் கட்சியில் இருந்து விலகி நாகரத்தினம் தலைமையில் முன்னாள் திமுக கவுன்சிலர் பத்மாவதி மற்றும் மாற்றுக் கட்சியினர், தெற்கு மாவட்ட தலைவர் சந்திரசேகர், கோட்டூர் நகர தலைவர் ரமேஷ் குமார் முன்னிலையில் 100 பேர் பாரதிய ஜனதா கட்சியில் இணைத்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி துணைத் தலைவர் தர்மராஜ், மாவட்ட, மண்டல நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஏழ்மையான குடும்பத்தின் பிறந்து சாதித்த ஸ்ரீ சரணி

## அள்ளி கொடுத்த சந்திரபாபு நாயுடு

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி ஐசிசி உலகக் கோப்பையை வென்று நாட்டுக்கே பெருமை சேர்த்திருக்கும் இந்தச் சூழலில், அணியில் இடம்பெற்ற வீராங்கனைகளுக்கு மாநில அரசுகள் கௌரவம் அளித்துள்ளன. ஆந்திரப் பிரதேசத்தின் கடப்பா மாவட்டத்தைச் சேர்ந்த இளம் சுழற்பந்து வீச்சாளரான ஸ்ரீ சரணிக்கு, ஆந்திர மாநிலத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.



நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் தன் மகளின் கனவுக்காகப் போராடிய அவரது குடும்பத்தின் உழைப்பை மதிக்கும் வகையில், ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, சரணியை நேரில் சந்தித்துப் பாராட்டினார். மேலும், அவருக்கு ரூ.2.5 கோடி ரொக்கப் பரிசு, மாநிலத்தில் ஒரு குரூப்-I அரசு வேலை, மற்றும் சொந்த மாவட்டமான கடப்பாவில் 1,000 சதுர கெஜம் வீட்டு மனை ஆகியவற்றை அளிப்பதாக அறிவித்தார்.

21 வயதான இடது கை சுழற்பந்து வீச்சாளரான இவர், கடந்த ஏப்ரல் மாதத்தில் தான் சர்வதேச அரங்கில் அறிமுகமானார். உலகக் கோப்பை தொடர் முழுவதும் அவர் இந்தியாவின் மிகவும் நம்பகமான பந்து வீச்சாளர்களில் ஒருவராக உருவெடுத்தார். அவர் மொத்தம் 14 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். குறிப்பாக, தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான இறுதிப் போட்டியில், அன்னேகே போஷ் விக்கெட்டை வீழ்த்தி, இந்தியாவுக்கு ஒரு முக்கியத்திருப்புமுனையை அளித்தார். கடப்பாவில் ஏழ்மையான குடும்பத்தில் இருந்து வந்த சரணி, உள்ளூர் மற்றும் மாநில அணிகளில் கடுமையாக உழைத்துதேசிய அணியில் இடம்பிடித்தார். அவர் மாநிலம் திரும்பியபோது, கண்ணவரம் விமான நிலையத்தில் அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் ரசிகர்கள் திரண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அதேபோல, உலகக் கோப்பையை வென்ற இந்திய அணியில் இடம்பிடித்த மகாராஷ்டிரா மற்றும் மும்பையைச் சேர்ந்த நட்சத்திர வீராங்கனைகளுக்கும் மாநில அரசு சார்பாக உயரிய கௌரவம் அளிக்கப்பட்டது. அணியின் முக்கிய வீரர்களான ஸ்மிருதிமந்தனா, ஜெமிமா ரோட்ரிக்ஸ், மற்றும் ராதா யாதவ் ஆகியோரின் அபாரத் திறமையைப் பாராட்டி, மகாராஷ்டிர முதலமைச்சர் தேவேந்திர ஃபட்னாவிஸ், அவர்களுக்கு தலா ரூ.2.25 கோடி ரொக்கப் பரிசு வழங்கப்படும் என அறிவித்தார்.

ஜெமிமா ரோட்ரிக்ஸ், தங்கள் அணியின் மன உறுதியைப் பற்றிப் பேசுகையில், "எங்களின் பலம், நாங்கள் எத்தனை வெற்றிகளைப் பெற்றோம் என்பதன் எண்ணிக்கையில் இல்லை. மாறாக, தோல்விக்குப் பிறகு நாங்கள் எப்படி எழுந்தோம் என்பதில்தான் உள்ளது" என்று உணர்ச்சிப்பூர்வமாகக் குறிப்பிட்டார்.

# பொதுமக்கள் பயன்படுத்தும் சாலையை மூட வேண்டாம் எம்.எல்.ஏ கே.ஆர்.ஜெயராம் வலியுறுத்தல்

தி கோவை ஹெரால்டு



கிழக்கு மண்டலத்தில் 23 ஆண்டுகளாக பொதுமக்கள் பயணம் செய்து வரும் பூங்கா சாலையைமூடாமல் தொடர்ந்தும் பயன் படுத்த அனுமதிக்கசிறப்புதீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என சிங்காநல்லூர் தொகுதிஎம். எல்.ஏ கே.ஆர். ஜெயராம் கோவை மாநகராட்சியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மாநகராட்சி ஆணையர் மா.சிவகுருபிரபாகரனுக்கு மனு அளித்த அவர், 59-ஆம் வார்டின் கிருஷ்ணா காலனி மற்றும் 61-ஆம் வார்டின் ரிலையன்ஸ் கார்டன் பகுதிகளை இணைக்கும் பூங்கா சாலை, உள்ளாட்சி நிர்வாகத்தால் முறையாக சுற்றுச்சுவர் அமைக்கப்பட்ட நிலையில் நீண்ட காலமாக பொதுமக்கள் பயன்படுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

சமீபத்தில் மாநகராட்சியின் உத்தரவின்படி பூங்காவின் இருபுறக் கேட்டுகளும் பூட்டப்பட்டதால், அப்பகுதி மக்களுக்கு தினசரி பயணத்தில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். குறிப்பாக, கிருஷ்ணா காலனி, வரதராஜபுரம், எம்.ஜி.ஆர் நகர் பகுதிகளில் வசிக்கும் மக்கள், பள்ளி-கல்லூரி மாணவர்கள், வேலைக்கு செல்வோர், மேலும் அவசர காலங்களில் ஆம்புலன்ஸ் உள்ளிட்ட வாகனங்கள் கூட இச்சாலையையே அதிகமாக நம்புகின்றன.

இந்த நிலையில், சாலை மூடப்பட்டதால் பொதுமக்கள் நேரமும் தூரமும் அதிகரிக்கும் மாற்றுப் பாதையை பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, பூங்கா சாலையை தொடர்ந்தும் திறந்தவாறே வைத்திருக்க மாநகர மாமன்றத்தில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று எம்.எல்.ஏ ஜெயராம் மனுவில் வலியுறுத்தியுள்ளார்.

# டெங்கு பாதிப்பு கண்டறியப்பட்டால் களப்பணியாளருக்கு ரூ.200 அபராதம்

மழை மற்றும் குளிர்காலங்களில் ஏடிஸ்-எஜிப்டை கொசு அதிகமாக பெருகுவதால், டெங்கு காய்ச்சல் பெருமளவில் பரவி வருகிறது. மாநிலம் முழுவதும் இதுவரை 17,000க்கும் மேற்பட்டோர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 9 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. பருவமழை தொடர்வதால், வரும் ஜனவரி மாதம் வரை டெங்குபாதிப்புஅதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது என மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

டெங்கு பரவலை கட்டுப்படுத்துவதற்காக, 23,000க்கும்மேற்பட்ட கொசு ஒழிப்புகளப்பணியாளர்கள் வீடுகள் மற்றும் பொது இடங்களில் கொசு லார்வா தேடி அழிக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். டெங்கு அதிகம் கண்டறியப்படும் பகுதிகளில்,புகைபுழக்குதல் மற்றும் நீர் தேங்காத சூழல் உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ஒரு பகுதி அல்லது கிராமத்தில் ஒரே நேரத்தில் மூன்று பேருக்கு மேல் டெங்கு பாதிப்பு ஏற்பட்டால், அப்பகுதி களப்பணியாளர்கள் தங்களின் பொறுப்பை முறையாக நிறைவேற்றவில்லை எனக் கருதப்படும். இதனைத் தடுக்க, பொது சுகாதாரத் துறை 200 ரூபாய் அபராதம் மற்றும் ஒருநாள் சம்பளம் ரத்து செய்யும் நடவடிக்கையை அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து பொது சுகாதாரத்துறைஅதிகாரிகள் தெரிவித்ததாவது:

"டெங்கு பரவலைத் தடுப்பது கூட்டுப்பணியாகும். பாதிக்கப்பட்ட நபர் சரியான சிகிச்சை பெறுவதை உறுதிப்படுத்துவதோடு, மேலும்பரவாமல்தடுப்பதில் களப்பணியாளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். பணிகள் முறையாக செய்யப்படாதால், தண்டனை வழங்கப்படும்" என தெரிவித்தனர்.

# எப்படியிருந்தவர், இப்படி ஆயிட்டாரே... ரணதுங்காவின் பிட்னெஸ் ரகசியம்






சமீபத்தில் இலங்கை அணியின் முன்னாள் வீரர் ஜெயசூர்யா பகிர்ந்த புகைப்படத்தை கண்டதும் பலரும் அதிர்ச்சியடைந்தனர். இந்த புகைப்படத்தில் இலங்கை அணியின் முன்னாள் கேப்டன் அர்ஜுனா ரணதுங்கா உடல்மெலிந்து காணப்பட்டார். இந்த புகைப்படம் சமீபத்தில் கொழும்புவில் நடந்த தமிழ்யூனியன் அமைப்பின் 125வது ஆண்டு விழாவில் எடுக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் அர்ஜுனா ரணதுங்கா, அரவிந்த டி சில்வா, முத்தையா முரளீதரன், ஜெயசூர்யா ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த புகைப்படத்தை பார்த்த பல ரசிகர்களுக்கும் இது ரணதுங்காவா? என்று நம்பமுடியாமல் கேள்வி எழுப்பினர். அவருக்கு ஏதும் உடல் நல பாதிப்பா? என்றும் சந்தேகங்களால் துளைத்தனர். சிலர், இப்போது 20 வயது குறைந்துபோல ரணதுங்கா காணப்படுகிறார் என்றும் பாசிடிவாககூறினர். ஆனால், அர்ஜுனா ரணதுங்கா கடுமையான உழைப்பின் காரணமாகவேதனது உடல் எடையை குறைத்துள்ளார். தான் விளையாடும் காலக்கட்டத்திலேயே உடல் எடை காரணமாக பல பிரச்னைகளை அவர் எதிர்கொண்டார். அப்போது, பெயின்கில்லர் ஊசிகளை போட்டுக் கொண்டுதான் விளையாடியதாகவும் பேட்டிகளில் அவர் சொன்னதும் உண்டு.

தற்போது, 61 வயதான ரணதுங்கா 2024 ஆம் ஆண்டில், பேரியாட்ரிக் அறுவை சிகிச்சை செய்து கொண்டார். இதற்கு, பிறகு ரணதுங்கா ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பராமரித்து வருகிறார். விளைவாக ஸ்லிம்பாயாக மாறி விட்டார்.

இது குறித்து, ரணதுங்காக கூறுகையில், எனது தோற்றத்தை பற்றியது அல்ல. உடல்நலப் பிரச்சினையுடன் தொடர்புடையது. அறுவை சிகிச்சை செய்த 6 மாதங்களுக்குப் பிறகு, மிகவும் நன்றாக உணர ஆரம்பித்தேன். என்னால் படிகளில் ஏற முடிந்தது. தரையில் உட்கார முடிந்தது. கடந்த 10 ஆண்டுகளாக என்னால் செய்ய முடியாத பல விஷயங்களை இப்போது, என்னால் செய்ய முடிந்தது. எனக்கு தூங்கும் போது மூச்சுத்திணறல் இருந்தது. நீரிழிவு நோய் நெருங்கியது. இப்போது எல்லாம் போய்விட்டது. நான் மட்டுமல்ல எனது குடும்பத்தில் பலரும் இந்த அறுவை சிகிச்சை செய்துள்ளோம். இப்போது, முறையான உணவுபழக்க வழக்கம், உடற்பயிற்சி காரணமாக இளம்வயது போல உணருகிறேன்' என்கிறார்.

# TN ALERT செயலி மக்கள் பாதுகாப்புக்காக தமிழக அரசு அறிமுகப்படுத்திய எச்சரிக்கை சேவை

தமிழக அரசால் உருவாக்கப்பட்ட TN ALERT செயலி, அவசர மற்றும் ஆபத்தான காலங்களில் எச்சரிக்கை செய்திகளை உடனடியாக பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் நோக்குடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த செயலியின் மூலம் இயற்கை சீற்றங்கள், பேரிடர்கள், பெருவெள்ளம், சுனாமி, நிலநடுக்கம், கடல் கொந்தளிப்பு, மிகக் கனமழை போன்ற சூழ்நிலைகளில் முன் எச்சரிக்கை தகவல்களைப் பெறலாம்.

இந்த செயலி, சுற்றுப்புற காலநிலை மாற்றங்கள் மற்றும் அதன் விளைவுகளை முன்கூட்டியே அறிந்து எச்சரிக்கைகள் வழங்குவதன் மூலம் மக்களை பாதுகாப்பாக இருக்க உதவுகிறது. இதனை நமது செல்பேசியில் நிறுவியவுடன், ஆபத்து தொடர்பான அறிவிப்புகள் முக்கிய அறிவிப்பு (Push Notification) வடிவில் உடனடியாக வரும்.




மேலும், இந்த செயலியின் சிறப்பம்சம் என்னவெனில், இது பயனரின் தற்போதைய இருப்பிடத்தை கணக்கில் வைத்து துல்லியமான எச்சரிக்கை தகவல்களை வழங்குகிறது. தமிழிலும் ஆங்கிலத்திலும் பயன்படுத்தக்கூடிய இந்த செயலியில் வழங்கப்படும் அனைத்து தகவல்களும் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் உறுதிப்படுத்தப்பட்டவை.

இச்செயலியில், பேரிடர் காலங்களில் செய்ய வேண்டியவை, செய்யக்கூடாதவை என பயனுள்ள அறிவுரைகளும் இணைக்கப்பட்டுள்ளன. இது மக்களின் பாதுகாப்பு விழிப்புணர்வை அதிகரிக்க உதவுகிறது.

TN ALERT செயலியை பெற Google Play Store-இல் "TN ALERT" என தேடி பதிவிறக்கம் செய்யலாம். பதிவிறக்கத்தின் பின்னர், மொபைல் எண்ணை கொடுத்து பதிவு செய்து கொள்ள வேண்டும். அதனைத் தொடர்ந்து, Push Notifications அமைப்பை இயலுமைப்படுத்தினால், தகவல்கள் தாமதமின்றி கிடைக்க பெறும்.

மேலும், நமக்கு அருகில் உள்ள நிவாரண முகாம்கள், அவசர உதவி எண்கள் போன்ற பயனுள்ள தகவல்களும் இந்த செயலியின் மூலம் பெறலாம். இதனால் பேரிடர் நேரங்களில் உதவி பெறுவது மேலும் எளிதாகிறது.

# பேரூர், பட்டீசுவரசுவாமி கோவில் மருத்துவ மையத்தில் பணியிடங்களை நிரப்ப முடிவு

கோவை மாவட்டம், பேரூர் வட்டம், பேரூர், அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயிலில் அமைக்கப்படவுள்ள மருத்துவ மையத்தில் மருத்துவர், செவிலியர் மற்றும் நர்சிங் அசிஸ்டெண்ட் பதவிகளில் நியமனம் செய்வதற்காக கீழ்கண்ட காலிப்பணியிடங்களுக்கு தகுதியுள்ள இந்து சமயத்தைச் சார்ந்த நபர்களிடமிருந்து 02.12.2025 மாலை 5.45 மணிவரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணியிடங்கள் விவரம்: மருத்துவர்: 01 செவிலியர்: 02 நர்சிங் அசிஸ்டெண்ட்: 02 மொத்தம் 05 பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. கல்வி தகுதி மற்றும் சம்பளம்: * மருத்துவர் பணிக்கு எம்பிபிஎஸ் முடித்திருக்க வேண்டும். மாதம் ரூ.36,700 - 1,16,200 வரை சம்பளம் வழங்கப்படும். செவிலியர் பணிக்கு டிப்ளமோ பொது நர்சிங் முடித்திருக்க வேண்டும். சம்பளமாக ரூ.19,500 - 62,000 வரை வழங்கப்படும். * நர்சிங் அசிஸ்டெண்ட் பணிக்கு 8-ஆம் வகுப்பு தேர்ச்சி மற்றும் தமிழில் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும். மாத சம்பளமாக ரூ.11,600 - 36,800 வரை வழங்கப்படும்.

மருத்துவர் மற்றும் நர்சிங் பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் 35 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். நர்சிங் அசிஸ்டெண்ட் பணிக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு 40 ஆகும். தகுதியும் ஆர்வமும் உள்ள விண்ணப்பதாரர்கள் தேர்வு அறிவிப்பை படித்த பிறகு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை திருக்கோயில் அலுவலகத்தில் நேரடியாக இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். https://perurpatteeswarar.hrce.tn.gov.in முகவரிகளில் "அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில்" என்ற பெயரில் உள்ள பக்கத்தில் விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அரசு விடுமுறை அல்லாத நாட்களில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: உதவி ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில், பேரூர், பேரூர் வட்டம், கோவை மாவட்டம் - 641010.

# இரு மூதாட்டிகள் கொலை சேலத்தை அலற வைத்த அய்யனார்

சேலம் மாவட்டம் இளம்பிள்ளை அருகே இடங்கணசாலை தூதனூர் காட்டுவளவு கல்குவாரியில் கடந்த 4ம் தேதி இரு மூதாட்டிகள் இறந்து கிடந்தனர். தகவல் அறிந்தவுடன் போலீசார், தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று இருவரின் உடல்களை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர். அப்போது தூதனூர் காட்டுவளவு பகுதியை சேர்ந்த அண்ணாமலையின் மனைவியும், பெரியம்மா (வயது 75) என்பதும், இ.காட்டூர் பகுதியை சேர்ந்த மாரிமுத்து மனைவி பாவாயி(70) என்பதும் தெரிய வந்தது. இதில் பெரியம்மா ஆடு மேய்க்கவும், பாவாயி விவசாய கூலி வேலைக்கும் சென்ற நிலையில் இருவரும் சடலமாக மீட்கப்பட்டனர். அதோடு பெரியம்மா அணிந்திருந்த இரண்டு கம்மல், மூக்குத்தி, கால் காப்பு. பாவாயி அணிந்திருந்த கம்மல், கால் காப்பு ஆகியவை மாயமாகியிருந்தது.

இதனால், நகைக்காக அவர்கள் 2 பேரும் கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என்று போலீசார் கருதினர். இது தொடர்பாக 3 தனிப்படை அமைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்த கொலைகள் தொடர்பாக, சேலம் அடுத்த கருப்பூர், வெள்ளாளபுரம் பகுதியைச் சேர்ந்த அய்யனார்(55) என்பவரை போலீசார் தேடி வந்தனர். இவர் ஒருக்காமலை அடிவாரத்தில் பதுங்கி இருந்தார். அவரை போலீசார் பிடிக்க சென்றனர். அப்போது அவர் போலீஸ்காரரின் கையில் அரிவாளால் வெட்டினார். இதையடுத்து, தற்காப்புக்காக அய்யனாரை போலீசார் துப்பாக்கியால் சுட்டனர். இதில் காலில் காயமடைந்த அய்யனார் சுருண்டு விழுந்தார். அவரை போலீசார் கைது செய்தனர். தற்போது, அரிவாள் வெட்டு காயமடைந்த போலீஸ்காரர் மற்றும் அய்யனார் ஆகியோர் சேலம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. துப்பாக்கியால் சுட்டு பிடிக்கப்பட்ட அய்யனார் பற்றிய திடுக்கிட வைக்கும் தகவல்கள் வெளியாகி உள்ளது. இவர் மீது ஏற்கனவே 5 கொலை வழக்குகள் உள்ளன. இதில், 7 ஆண்டு சிறை தண்டனை பெற்றார். அதன்பிறகு, கடந்த 2019ம் ஆண்டு சிறையில் இருந்து வெளியே வந்துள்ளார். அதன்பிறகும் கூட அய்யனார் திருந்தவில்லை.

இப்போது, மீண்டும் கொலை வழக்கில் கைதாகியுள்ளார்.

# ரூ.1,000 கடன்... ரூ.11 கோடி பரிசு காய்கறி வியாபாரியின் அதிர்ஷ்டம்

ராஜஸ்தான் மாநில ஜெய்ப்பூர் அருகே கோட்புட்லி பகுதியில் காய்கறி கடை நடத்தி வந்த அமித் செஹ்ராவிற்கு, லாட்டரியில் ரூ.11 கோடி பரிசு கிடைத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

32 வயதான அமித் செஹ்ரா சமீபத்தில் பஞ்சாப் மாநில மோகா நகரத்திற்குச் சென்றபோது, தனது நண்பரிடமிருந்து ரூ.1,000 கடன் வாங்கி, பஞ்சாப் அரசின் தீபாவளி பம்பர் 2025 லாட்டரியின் இரண்டு சீட்டுகளை வாங்கினார். இதில், தனது மனைவியின் பெயரில் வாங்கிய சீட்டில் ரூ.1,000 மட்டுமே கிடைத்தது. ஆனால் தனது பெயரில் வாங்கிய சீட்டில் ரூ.11 கோடி பரிசு வந்துள்ளது.

இந்த பரிசு குறித்து பேசிய அமித் செஹ்ரா, "பல ஆண்டுகளாக நான் வாழ்வாதாரம் தேடி போராடிக் கொண்டிருந்தேன்.

இப்போது என் துயரங்கள் அனைத்தும் மறைந்துவிட்டன. நான் அனுமன் பக்தன். இதிலே தெய்வீக அருள் உள்ளது. வறுமை ஒருநாள் நிச்சயம் முடிவடையும் என்பதை என் வாழ்க்கை நிரூபிக்கிறது" என தெரிவித்தார்.

மேலும், லாட்டரி வாங்க உதவ ரூ.1,000 கொடுத்த நண்பருக்கு நன்றி தெரிவித்து, அவரது இரண்டு மகள்களுக்கும் தலா ரூ.50 லட்சம் வழங்குவதாக அறிவித்துள்ளார்.

"குழந்தைகளின் கல்விக்காகவும், குடும்பத்திற்காக ஒரு தனி வீடு கட்டவும் இந்த தொகையை பயன்படுத்த உள்ளேன்" என்று செஹ்ரா தெரிவித்துள்ளார்.

# யூடியூப் பழைய காணொளிகளும் இப்போது அதிகத் தெளிவில் காணலாம்

இணைய உலகில் காணொளி பகிர்வு மேடைகளில் முன்னிலையில் உள்ள யூடியூப் நிறுவனம், புதிய தொழில்நுட்ப முன்னேற்றத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம், முன்பு குறைந்தத் தெளிவில் பதிவேற்றப்பட்ட காணொளிகளையும் இப்போது அதிகத் தெளிவில் காண முடியும்.

யூடியூப் நிறுவனத்தினர் கூறியதாவது:

கணினி நுண்ணறிவின் உதவியுடன், குறைந்த உருவத் தரத்தில் உள்ள காணொளிகள் தானாகவே உயர்ந்த உருவத் தரத்திற்குப் பரிமாற்றமடையும். இதற்காக 'அதிகத் தெளிவு மாற்று' என்ற புதிய தேர்வு அமைப்புப் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. இதை செயல்படுத்திக் கொண்டால், பழையதோ புதியதோ என எல்லா காணொளிகளும் தெளிந்த உருவில் காட்சியளிக்கும்.

இதனால், பல ஆண்டுகளுக்கு முன்பு பதிவிடப்பட்ட காணொளிகளையும் இப்போது கூர்மையான உருவத் தெளிவுடன் காண முடியும். மேலும், இனி பதிவேற்றப்படும் காணொளிகளுக்கும் இந்த வசதி பொருந்தும்.

# 'எல்லாம் இருக்கும் போது, ஒட்டிக் கொள்வதும்... எதுவுமே இல்லாத போது கூட இருப்பதும்'

உலகக்கோப்பையை கைப்பற்றிய மகளிர் அணியை நாடே இப்போது, தூக்கி வைத்து கொண்டாடுகிறது. இந்த நிலையில், இந்திய மகளிர் கிரிக்கெட் வாரிய முன்னாள் செயலாளர் நியூதன் கவாஸ்கர் (இந்திய முன்னாள் கேப்டன் கவாஸ்கரின் இளைய சகோதரி) சில வார்த்தைகளை உதிர்த்தார்.

"கண்ணுக்குத் தெரிந்து சிலர் வெற்றிக்கோப்பையை கையில் ஏந்துகின்றனர். கண்ணுக்குத் தெரியாத சிலர், அந்தக்கோப்பையை வெல்ல உதவியாக இருக்கின்றனர். எல்லாம் இருக்கும்போது உடன் ஒட்டிக்கொள்வது எப்படியிருக்கிறது? எதுவுமே இல்லாதபோது கூடவே நிற்பது எப்படி இருக்கிறது?"

எத்தகைய வலி இருந்திருந்தால் இத்தகைய வார்த்தைகளை அவர் கூறியிருப்பார். நடந்து முடிந்த மகளிர் உலகக் கோப்பையை வென்ற இந்திய மகளிர் அணிக்கு பி.சி.சி.ஐ 51 கோடியை பரிசாக அள்ளி கொடுத்துள்ளது. ஆனால், ஒருகாலக்கட்டத்தில் இந்திய மகளிர் அணியை பி.சி.சி.ஐ கண்டு கொண்டதே இல்லை. 2005ம் ஆண்டு உலகக் கோப்பை முதல் 2017ம் ஆண்டு உலகக் கோப்பை வரை, இந்திய மகளிர் அணி வீராங்கனைகளுக்கு போட்டி கட்டணமாக 1000 மட்டுமே வழங்கப்பட்டதாக இந்திய அணியின் முன்னாள் கேப்டன் மிதாலி ராஜ் கூறியிருந்ததும் கவனத்தில் கொள்ளத்தக்கது. அப்படியென்றால், உலகக் கோப்பையில் 8 ஆட்டங்களில் விளையாடினால் 8 ஆயிரம் மட்டுமே அவர்களுக்கு சம்பளமாக கிடைக்கும்.




இதையெல்லாம் விட கொடுமைகளை இந்திய மகளிர் அணி வீராங்கனைகள் சந்தித்துள்ளனர். கடந்த 2002ம் ஆண்டு நியூசிலாந்து நாட்டுக்கு இந்திய மகளிர் அணி சுற்றுப்பயணம் மேற்கொண்டது. அப்போது தங்குவதற்கு ஹோட்டல் அறை கூட பி.சி.சி.ஐ ஏற்பாடு செய்துதரவில்லை. அந்த நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் வீட்டில் நமது வீராங்கனைகள் தங்கியிருந்து விளையாடினார்கள். அடுத்து 2003ம் ஆண்டு இங்கிலாந்து சுற்றுப்பயணம். இப்போதும், பிசிசிஐ கை விட்டு விட்டது.

அப்போதுதான், இந்தத் தகவலை அறிந்த நடிகை ஒருவர் கண்கலங்கி போனார். கிரிக்கெட் மீது ஆர்வம் கொண்ட அந்த நடிகையின் பெயர் மந்திரா பேடி.

கிரிக்கெட் உலகின் முதன் பெண் பிராட்காஸ்டர். 2000ம் ஆண்டுகளில் இந்திய கிரிக்கெட் உலகின் கமெண்டரி, விவாதங்கள் நடத்தும் குழு என் அனைத்திலும் ஆண்களே இடம் பெற்றிருப்பார்கள். இந்த ஆணாதிக்கத்தை உடைத்து, கமெண்டரிவுமனாக மாறியவர்தான் மந்திரா பேடி. 2003ம் ஆண்டு உலகக் கோப்பை தொடரில் மந்திரா பேடியை பார்த்து உலகமே வியந்து போனது. கிரிக்கெட்டைப் பற்றி முழுமையாக அறிந்து கொண்டே பிராட்காஸ்டராக களம் இறங்கியிருந்தார் அவர்.

பாலிவுட்டில் பெரிய நடிகை இல்லையென்றாலும், ஓரளவுக்கு சம்பாத்தியம் மந்திரா பேடிக்கு இருந்தது. இதனால், இந்திய மகளிர் அணிக்கு உதவுவதற்காக விளம்பரங்களில் நடித்து, அந்தப் பணத்தை அப்படியே வழங்கினார் மந்திரா பேடி. இந்தப் பணத்தை கொண்டுதான், இந்திய மகளிர் அணியினர் 2003ம் ஆண்டு இங்கிலாந்து சென்று விளையாடினர். அதுமட்டுமல்ல, தனது பிரபலத்தை பயன்படுத்தி பல்வேறு நிறுவனங்களை அணுகி மகளிர் அணிக்கு ஸ்பான்ஷர்களையும் மந்திரா பிடித்தார். 2003ம் ஆண்டு முதல் 2005ம் ஆண்டு வரை இந்திய மகளிர் அணிக்கு ஏதாவது ஒருவகையில் அவர் உதவிக் கொண்டே இருந்தார். இந்திய மகளிர் அணி தடுமாறிய காலக்கட்டத்தில் கரம் கொடுத்து , கரை சேர்த்தவர் மந்திரா பேடி என்றால் அது மிகையல்ல.

பல ஆண்டு காலப் போராட்டத்துக்கு பிறகு, நடப்பு உலகக் கோப்பையில் தொடரில் இந்திய அணி கோப்பையை வென்றது. இந்த தருணத்தில் மறக்காமல் மந்திராவின் உதவியை நினைவுகூர்ந்தார் நியூதன். அவர் கூறுகையில், '1973ம் ஆண்டு இந்திய மகளிர் கிரிக்கெட் வாரியம் உருவாக்கப்பட்டது. 2006ம் ஆண்டுதான் இந்திய அணியை பி.சி.சி.ஐ தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. அதுவரை, மகளிர் கிரிக்கெட் அணியினர் தங்களது ஆர்வத்தாலும், அர்ப்பணிப்புணர்வாலும் மட்டுமே விளையாடிக் கொண்டிருந்தனர். பணமும் எங்களிடத்தில் இல்லை. நியூசிலாந்து சுற்றுப்பயணத்தின் போது, பல NRI வீடுகளில் நமது வீராங்கனைகள் தங்கியிருந்து ஆடினர். இதையெல்லாம் அறிந்த நடிகை மந்திரா பேடி, புகழ்பெற்ற நிறுவனத்தின் வைர விளம்பரத்தில் நடித்து, அந்தப் பணத்தை எங்களுக்குக் கொடுத்தார். அந்தப் பணத்தை கொண்டுதான் அடுத்து, இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டோம். மந்திராவின் உதவியால்தான் நாங்கள் இந்த அளவுக்கு முன்னேறியுள்ளோம். யாருமே மகளிர் விளையாட்டைப் பார்க்காத காலக்கட்டத்தில் இந்த அணிக்கு அடித்தளமாக இருந்தவர் மந்திரா' என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

கோப்பையை வென்ற இந்திய மகளிர் அணிக்கு மந்திரா பேடி எக்ஸ் பதிவில் கூறிய வாழ்த்தில், 'என்ன ஒரு பயணம், எத்தனை போராட்டம், இனிப்பான வெற்றி. இது ஒரு நீண்ட காலப் போராட்டத்துக்கான வெற்றி ' என்று பாராட்டியிருந்தார்.

# திடீரென ரூ.21 கோடி மதிப்புள்ள எருமை பலியானது எப்படி?

## மிருகவதை காரணமா ?

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் அருகே நடைபெறும் புஷ்கர் விழா, இந்தியாவின் மிகப்பெரிய கால்நடைத் திருவிழாக்களில் ஒன்று. இது ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் , நவம்பர் மாதங்களில் புஷ்கர் ஏரிக்கரையில் நடைபெறும். ஒட்டகங்கள், குதிரைகள், மாடுகள் போன்ற கால்நடைகளின் விற்பனை இங்கு களை கட்டும். இந்தியா முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான கால்நடை வியாபாரிகள் ஒட்டகங்கள், குதிரைகள், எருமைகள் மற்றும் ஆடுகளை வாங்கவும் விற்கவும் இங்கு கூடுவார்கள். கல்பெலியா நடனம், உள்ளூர் கைவினைப்பொருட்கள் விற்பனை, இசை நிகழ்ச்சிகள் மற்றும் நடனக் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் நடைபெறும். இங்கு நடைபெறும் ஒட்டகப் போட்டியும் மக்களை வெகுவாகக் கவரும்.




இந்த ஆண்டுக்கான புஷ்கர் விழா கடந்த அக்டோபர் 23 ம் தேதி தொடங்கியது. இதில், பங்கேற்க 3,000 குதிரைகள் மற்றும் 1,300 ஒட்டகங்கள் உட்பட 4,300-க்கும் மேற்பட்ட விலங்குகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. சண்டிகரைச் சேர்ந்த தொழிலதிபர் கேரி கில் என்பவரின், 'ஷபாஸ்' என்ற குதிரை, 15 கோடி ரூபாய் மதிப்பு கொண்டது என சமூக வலைதளங்களில் தகவல்கள் பரவின. ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த கில் என்பவர் வளர்க்கும், 'அன்மோல்' எனும் ஆண் எருமை, 23 கோடி ரூபாய் என கூறப்பட்டது. இந்த எருமை 1,500 கிலோ எடை கொண்டது. தினமும் 20 முட்டைகள், உலர்பழங்கள், பசுந்தீவனங்களை அன்மோல் உண்ணும். தினமும் ஆயில் மசாஜும் இதற்கு செய்யப்படும்.

இங்கு அழைத்து வரப்படும் சில குதிரைகள், இனப்பெருக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன. அவற்றை, உரிமையாளர்கள் விற்பதில்லை. ஆனால், குதிரைகள் விற்பனைக்கு, 5 சதவீத ஜி.எஸ்.டி. அமலில் உள்ளது. மற்ற விலங்குகள் விவசாய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுவதால் அவற்றுக்கு ஜி.எஸ்.டி வரி இல்லை. இந்த நிலையில், இந்த ஆண்டு புஷ்கர் விழாவில் ஒரு மிகப் பெரிய சோகம் நிகழ்ந்து விட்டது. கடந்த வெள்ளிக்கிழமை கண்காட்சியில் பங்கேற்ற 21 கோடி ரூபாய் மதிப்புள்ள எருமை மாடு திடீரென்று சுருண்டு விழுந்தது. தகவல் கிடைத்ததும் கால்நடை மருத்துவர்கள் இந்த எருமையை காப்பாற்றப் போராடினர். ஆனால், சிகிச்சை பலனளிக்காமல் இறந்து போனது. இந்த கண்காட்சியின் முக்கிய அடையாளமாக இருந்த எருமை மாடு இறந்து போனதால், நிகழ்ச்சி அமைப்பாளர்கள், மக்கள் கடும் வேதனையடைந்தனர். இது தொடர்பான , வீடியோவும் வெளியாகி வைரலானது.

தற்போது, இந்த எருமை திடீரென்று இறந்து போனதற்கான காரணங்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சம்பவத்தன்று இந்த எருமையின் உரிமையாளர் அதன் எடையை அதிகரித்து காட்டுவதற்காக அதிகப்படியான உணவுகளை கொடுத்துள்ளார். எடையை அதிகரிப்பதற்காகவும் அதிக விந்து உற்பத்தியாவதற்கும் ஊசி வழியாக மெடிசின்களை செலுத்தியுள்ளார். இதன் காரணமாக, திடீர் மாரடைப்பு ஏற்பட்டு எருமை மாடு இறந்து போனது தெரிய வந்துள்ளது.

இந்தத் தகவல் வெளியானதையடுத்து, பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர். 'அதிகப்படியான ஆண்டிபயோடிக் மருந்துகளை கொடுத்தது தவறு. இயற்கைக்கு மாறாக செய்யும் எதுவுமே மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். மனிதர்கள் நோயுற்ற சமூகமாக மாறியது போல, கால்நடைகளையும் மாற்றுகின்றனர்' என பிரபல நடிகை ஸ்னேகா உல்லல் இந்த சம்பவம் தொடர்பாக எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளார்.

# கோவை வந்த வந்தே பாரத் ரயிலுக்கு உற்சாக வரவேற்பு அளித்த பொதுமக்கள்



தி கோவை ஹெரால்டு

பிரதமர் மோடி இன்று எர்ணாகுளம்- பெங்களூர் இடையேயான வந்தே பாரத் ரயில் சேவையை துவக்கி வைத்தார். ரயிலானது கோவை வழியே செல்லும் நிலையில் கோயம்புத்தூர் ரயில் நிலையத்தில் வரவேற்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எர்ணாகுளத்தில் இருந்து பெங்களூரு நோக்கி சென்ற சிறப்பு வந்தே பாரத் ரயில் கோயம்புத்தூர் ரயில் நிலையம் வந்தடைந்ததும் ரயில் பயணிகள், தொழில்துறையினர், கல்லூரி மாணவர்கள், பாஜக மாவட்ட தலைவர் ரமேஷ்குமார், சந்திரசேகர், முன்னாள் மாவட்ட தலைவர் வசந்தராஜன், மேயர் ரங்கநாயகி, துணை மேயர் வெற்றிச்செல்வன், சேலம் கோட்டை ரயில்வே மேலாளர் பண்ணாலால், கூடுதல் மேலாளர் சரவணன் மற்றும் ரயில்வே அதிகாரிகள் கலந்து கொண்டு வரவேற்றனர்.

சேலம் கோட்ட ரயில்வே மேலாளர் பன்னாலால் செய்தியாளர் சந்திப்பில் கூறும்போது, இந்த சேவை பலதரப்பட்ட மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றார். மேலும் சாதாரண ரயில் சேவைகள் குறித்தும் மக்களிடம் கோரிக்கைகள் உள்ளது குறித்தான கேள்விக்கு அது குறித்து பரிசீலிக்கப்படும் என்றார்.

பின்னர் பேசிய கூடுதல் மேலாளர் சரவணன் இந்த ரயில்வே சேவை மூலம் குறைந்த நேரத்தில் பயணம் மேற்கொள்ளலாம். ரயில் நிலைய மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவையெல்லாம் முடிந்ததும் மக்களின் கோரிக்கைகளுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

# இரண்டாம் பசுபதி பாண்டியன் கைது

## விருதாசலம் காவல் நிலையத்தில் தஞ்சமடைந்த நெல்லை போலீஸ்

நெல்லையில் 6 இடங்களில் பெட்ரோல் குண்டு வீசிய வழக்கில் தேடப்பட்டு வந்த தேவேந்திர குல வேளாளர் எழுச்சி இயக்கத்தின் தலைவர் கண்ணபிரானை, மற்றொரு வழக்கில் ஜாமீனில் வெளிவந்தபோது, கடலூர் மத்திய சிறை வாசலிலேயே நெல்லை தனிப்படை போலீஸார் கைது செய்தனர். தொடர்ந்து, நெல்லைக்கு அவரை வாகனத்தில் கொண்டு வந்து கொண்டிருந்தனர்.

ஆனால், கண்ணபிரானை ஏற்றி சென்ற நெல்லை போலீசாரின் வாகனங்களை பின் தொடர்ந்து அவரின் ஆதரவாளர்கள் வந்தனர். இதனால், மீண்டும் மோதல் ஏற்படும் அபாயம் உருவானது. தொடர்ந்து, பாதுகாப்பு கருதி நெல்லை போலீசார், விருதாச்சலம் போலீஸ் நிலையத்தில் தஞ்சமடைந்தனர். நெல்லை தச்சநல்லூர் காவல் நிலையத்தில் குண்டு வீசிய வழக்கில் கண்ணபிரான் தற்போது, கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், கண்ணபிரானின் மனைவி பேச்சியம்மாள் கூறுகையில், எனது ஊர் சத்ருப்புதூர். என் கணவர் பெயர் கண்ணபிரான் என்கிற



கண்ணபிரான் பாண்டியன். இவர், தேவேந்திர குல வேளாளர் எழுச்சி இயக்கத்தின் நிறுவனத் தலைவர். மக்கள் அவரை "இரண்டாம் பசுபதி" என்றுதான் அழைப்பார்கள். மக்களுக்கு என்ன பிரச்சனை என்றாலும், போராட்டம் நடத்தி அவர்களுக்கு தேவையான நிதியுதவியை பெற்றுத் தருவார்.

என் கணவர் மீது பல பொய் வழக்குகள் போடப்பட்டுள்ளன. மூன்று வாரங்களுக்கு முன்பு கூட, தச்சநல்லூர் காவல் நிலையம் முன்பு பெட்ரோல் குண்டு வீசப்பட்டதாக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதில், சம்பந்தப்பட்ட அருண்குமார் என்ற இளைஞன் எங்கள் வீட்டில் தங்கியிருந்தான் என்பது உண்மைதான்.

ஆனால், அவனுக்கும் என் கணவருக்கும் ஒரே வழக்கில் நிபந்தனை ஜாமீன் கிடைத்ததால், கையெழுத்து போடுவதற்காக மட்டும் எங்கள் வீட்டில் தங்கினான். காவல்துறை அவனை வீட்டில் வைத்திருக்கக் கூடாது என்று சொன்ன பிறகு, நாங்கள் வெளியேற்றி விட்டோம்.

ஆனால், காவல்துறை அருண்குமாரிடம் கஞ்சா இருந்ததாகக் கூறி வழக்கு பதிவு செய்துள்ளனர். இதுகுறித்து, காவல் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் என் கணவருக்கு தொலைபேசியில் தகவல் தெரிவித்தனர். நாங்கள் நேரில் சென்று பேசியபோது, அந்த இளைஞன் தன்மீது எந்த தவறும் இல்லை என்றும், காவல்துறைதான் பொய்யாக வழக்கு போடுவதாகவும் கூறினான்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, அருணின் தம்பி மற்றும் அவனது நண்பர்கள் சிலர் தச்சநல்லூர் காவல் நிலையம் மீது பெட்ரோல் குண்டு வீசியுள்ளனர். இதற்கு என் கணவர்தான் காரணம் என்று கூறி, அவரை இந்த வழக்கில் சேர்த்துள்ளனர். ஆனால், சம்பவம் நடந்த தினத்தில் இரவு 3 மணி வரை என் கணவர் காவல்நிலைய அதிகாரிகளுடன் தொலைபேசியில் பேசிக்கொண்டு தான் இருந்தார். அப்படியிருக்கும்போது, அவர் எப்படி இந்த சம்பவத்திற்கு காரணமாக இருக்க முடியும்?

சம்பவம் நடந்த தினத்தில் என் கணவரை கைது செய்யாமல், இவ்வளவு நாட்கள் கழித்து இப்போது கைது செய்வது ஏன்? இது முழுக்க முழுக்க என் கணவரை பழிவாங்கும் நோக்கத்தோடு, சாதி ரீதியாக செய்யப்படும் சதி. என் கணவர் மீது போடப்பட்டுள்ள அனைத்து வழக்குகளும் பொய். திருச்சியில் ஒரு விழாவிற்கு சென்றிருந்தபோதுகூட, 500 ரூபாய் வழிப்பறி செய்ததாக ஒரு பொய் வழக்கு போட்டார்கள். 10 லட்சம் ரூபாய் காரில் செல்லும் அவர், 500 ரூபாய்க்காக வழிப்பறி செய்வாரா?

இப்போதுகூட, என் கணவரை ஜாமீனில் எடுக்கவேண்டாம் என்று சொல்கிறார்கள். அவர் மீது 7 வழக்குகள் போட்டிருக்கிறார்கள். நாங்கள் எப்படி ஜாமீனில் எடுக்க முடியும்? இது முழுக்க முழுக்க பொய் வழக்கு. இதை நிரூபிக்க, சம்பந்தப்பட்ட இளைஞர்களிடம் முறையாக விசாரணை நடத்த வேண்டும். என் கணவர் சொன்னதால்தான் குண்டு வீசினோம் என்று ஒரு வார்த்தை சொன்னால், நாங்கள் இந்த இடத்தை விட்டு நகர்ந்துவிடுகிறோம்.

என் கணவருக்கு நீதி கிடைக்கும் வரை நான் இங்கிருந்து நகர மாட்டேன். என் பிள்ளைக்கு நான் பால் கொடுக்க மாட்டேன். என் வாழ்க்கைக்கு உத்தரவாதம் வேண்டும். என் கணவரை விடுதலை செய்யும் வரை எனது போராட்டம் தொடரும். நேற்று என் கணவரை விடுதலை செய்வதாகக் கூறியதால், நான் குழந்தையுடன் கடலூர் மத்திய சிறைக்குச் சென்றேன். ஆனால், அங்கும் அவரை விடுதலை செய்யவில்லை. எல்லாம் திட்டமிட்டு செய்யப்படுகிறது. இது சாதிரீதியாக என் கணவரை பழிவாங்கும் செயல். இதை நான் சும்மா விடமாட்டேன். எனக்கு நீதி வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மழைகாலம்; கோவை மக்களே இந்த நான்கு வகை பாம்புகளிடம் உஷார்!

இந்தியாவில் கண்ணாடி விரியன், கட்டுவிரியன், நல்லப்பாம்பு, சுருட்டை விரியன் போன்ற பாம்புகள் அதிகவிஷம் நிறைந்தவை. கண்ணாடிவிரியன் பாம்பு பெரும்பாலும் பகலில் சுறு சுறுப்புடன் வேட்டையாடும். இதன் முக்கிய உணவு எலிகள்தான். எனவே வயல்கள், கரும்பு தோட்டங்கள், நெல் குடோன்கள் என சமவெளி பகுதிகளில்தான் வசிக்கும். இது கடிப்பதற்கு முன்னர் தனது தோலை உரசி 'உஸ்' என ஒலி எழும்பும். இதை கண்டுகொள்ளாமல், நெருங்கினால் நிச்சயம் கடித்துவிடும். இந்த வகை பாம்புகள் மிக குறைவான நேரத்தில் கடித்துவிடும். நீங்கள் கண்களை மூடி திறப்பதற்குள் எல்லாம் முடிந்துவிடும். இந்த பாம்பின் விஷம் ரத்தத்தை வேகமாக உறைய வைத்துவிடும். இதனால் உள்ளுறுப்புகள் செயலிழக்கும். முதலில் பாதிப்படைவது சிறுநீரகம் தான். எனவே கடிபட்டவுடன் உடனடியாக அரசு மருத்துவமனைக்கு போக வேண்டும்.

அடுத்து கட்டுவிரியன். இந்த வகை பாம்புகள் இரவில்தான் வெளியே வரும். மனிதர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அருகிலேயே இது இருக்கும் என்பதால் மனித-பாம்பு மோதல் தவிர்க்க முடியாததாக இருக்கிறது. இது கடித்தவுடன் வலி பெரியதாக இருக்காது. சாதாரணமாக கொசு கடித்ததை போலவோ, அல்லது எறும்பு கடித்ததை போலவோதான் இருக்கும். கவனிக்காமல் விட்டுவிட்டால், கொஞ்சம் நேரம் கழித்து வலி உடல் முழுவதும் பரவும்,



அப்போதும் கவனிக்காமல் இருந்தால் மரணம் நிச்சயம். இது கடித்தவுடன் கண்கள் இமை கனமாக இருப்பதாக தோன்றும், பார்வைகள் இரட்டையாக தெரியும், பேச்சு தெளிவில்லாமல் குழம்பும், உடல் பலவீனம் ஏற்படும். பொதுவாக கட்டுவிரியன் கடித்தால் அதன் பாதிப்புகள் தெரிய கொஞ்சம் தாமதமாகலாம். இருப்பினும் தாமதிக்காமல் மருத்துவமனையை அணுக வேண்டும்.

அடுத்ததாக நல்லப்பாம்பை சொல்லலாம். இதுவும் உயிரை பறிக்கும் அளவுக்கு விஷத்தை கொண்டிருக்கிறது. இந்த வகை பாம்புகளை நெருங்கும்போது படம் எடுத்த எச்சரிக்கும். மீறி அருகில் சென்றால், கடிப் பதை போல பயமுறுத்தும். அதையும் தாண்டி அதை பிடிக்க போனால் நிச்சயமாக கடித்துவிடும். இந்த வகை பாம்புகள் கிராம தெய்வங்களாக இன்றும் வணங்கப்படுகின்றன. மனிதர்களுக்கு நன்கு பழக்கப்பட்ட இந்த வகை பாம்புகள், விவசாய நிலங்களுக்கு அருகில்தான் இருக்கும். கடித்துவிட்டால், நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு நரம்புகளுக்கும், தசைகளுக்கும் இடையேயான தொடர்பு துண்டிக்கப்பட்டுவிடும். இதனால், சுவாசிக்க முடியாமல் உயிரிழப்பு ஏற்படும். ஆனால் சரியான நேரத்தில் சிகிச்சை அளித்தால் காப்பாற்றிவிடலாம். நாகபாம்புக்கும், சாரை பாம்புக்கு பலருக்கும் வித்தியாசம் தெரிவதில்லை. நாகப்பாம்பின் தலையின் பின்புறம் U வடிவம் இருக்கும். இந்த வகை பாம்புகள் கடிப்பதற்கு முன்னர் படம் எடுத்து ஆடும். ஆனால் சாரைப்பாம்பு அப்படி செய்யாது. மனிதர்களை பார்த்துவிட்டால் உடனடியாக ஓடி ஒளிந்துக்கொள்ளும்.

அடுத்து சுருட்டை விரியன். சிறியதாக உள்ள இந்த பாம்பு கடித்தார் மரணம் நிச்சயம். இந்தியாவில் ஏற்படும் பாம்புக்கடி மரணங்களில் கணிசமானவை இந்த சுருட்டை விரியன் கடித்துதான் ஏற்படுகிறது. மற்ற மூன்று பாம்புகளை ஒப்பிடும்போது அளவில் மிகவும் சிறியதாக இருக்கும். ஆனால் ஆக்ரோஷமானவையாக காணப்படும். மலையடிவாரங்களிலும், விவசாய நிலங்கள் உள்ள பகுதியிலும் இந்த வகை பாம்புகள் காணப்படும். கடிப்பட்ட இடத்திலிருந்து ரத்தம் வந்துக்கொண்டே இருக்கும். மட்டுமல்லாது, பல் ஈறுகளிலிருந்து, சிறுநீரிலும் கூட ரத்தம் வெளியேறும். சரியான நேரத்திற்கு அரசு மருத்துவமனைக்கு போகாவிட்டால் உடனடியாக கிட்னி பெயிலியர் ஏற்படும். பின்னர் உயிரிழப்பு ஏற்படும்.

# கேரளாவில் பாலியல் குற்றவாளி : தமிழகத்தில் மத போதகர் 24 ஆண்டுகளாக போலீசுக்கு டிமிக்கி கொடுத்த கில்லாடி

கேரளாவைச் சேர்ந்த பாலியல் வன்கொடுமை வழக்கின் குற்றவாளி 24 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த நிலையில் சென்னையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கேரளா நிரமன்கர பகுதியைச் சேர்ந்தவர் டியூசன் ஆசிரியர் முத்துக்குமார். 2001-ம் ஆண்டு பள்ளி மாணவியை பாலியல் வன்கொடுமை செய்ததாக முத்துக்குமார் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் 3 மாதம் சிறையில் இருந்த முத்துக்குமார் ஜாமீனில் வெளியே வந்தார். ஆனால் ஜாமீனில் விடுதலையான பின்னர் கேரளாவை விட்டு தப்பிஓடி தலைமறைவானர் முத்துக்குமார். பாலியல் வன்கொடுமை வழக்கில் நீண்டகாலம் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்த முத்துக்குமாருக்கு எதிராக பிடிவாரண்ட்டும் பிறப்பிக்கப்பட்டது. இந்த நிலையில் கேரளா போலீசாருக்கு 24 ஆண்டுகளாக 'டிமிக்கி' கொடுத்து வந்த முத்துக்குமார் சென்னையில் கடந்த 5ம் தேதி சிக்கினார்.



2001-ம் ஆண்டு சிறையில் இருந்து ஜாமீனில் வெளியே வந்த முத்துக்குமார் கேரளாவை விட்டு தப்பி ஓடினார். நாகர்கோவிலில் தமது சகோதரியுடன் சிறிதுகாலம் வசித்தார். பின்னர் தென்காசிக்கு சென்றார். தென்காசியில் இருந்து சென்னைக்கு வந்த முத்துக்குமார், திருமணம் செய்து கொண்டார். இந்த திருமணத்தின் மூலம் முத்துக்குமாருக்கு ஒரு குழந்தையும் பிறந்தது. முத்துக்குமாரின் மனைவி உடல்நலக் குறைவால் இறந்துவிட 2-வதாகவும் சென்னையிலேயே திருமணம் செய்திருக்கிறார். அத்துடன் முத்துக்குமார், கிறிஸ்தவ மதத்துக்கு மாறி, 'சாம்' என பெயர் மாற்றினார். சென்னை அயனாவரத்தில் முத்துக்குமார், சாம் என்ற பெயரில் மதபோதகராகவும் பணிபுரிந்து வந்தார்.

கேரளா போலீசாருக்கு தம்மைப் பற்றி எந்த ஒரு தகவலும் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக வங்கி கணக்குகள் உள்ளிட்ட எந்த ஒரு டிஜிட்டல் ஆவணத்தையும் முத்துக்குமார் வைத்திருக்கவில்லை. கேரளா வாஞ்சியூரில் உள்ள குடும்பத்தினரை கூட செல்போனில் தொடர்பு கொள்வதில்லை; வெவ்வேறு லேண்ட் லைன் எண்களில் இருந்து மட்டுமே முத்துக்குமார் தொடர்பு கொண்டு பேசியதால் அவரது இருப்பிடத்தை கேரளா போலீசாரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

கேரளாவில் உள்ள தனது குடும்பத்தினரின் வங்கி கணக்குகளுக்கு வெவ்வேறு பெயர்களில் வெவ்வேறு நபர்கள் மூலமாகவே பணம் அனுப்பியும் வந்துள்ளார். முத்துக்குமாரின் இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் தொடர்ந்து கண்காணித்தனர் கேரளா போலீசார். முத்துக்குமாரின் குடும்பத்துக்கு பணம் அனுப்பி வைக்கப்பட்ட வங்கி கணக்குகள், அதில் கொடுக்கப்பட்டிருந்த செல்போன் எண்கள், முத்துக்குமார் பேசிய லேண்ட் லைன் எண்கள் ஆகிய அனைத்தையும் வைத்து சென்னையில் முகாமிட்டு கேரளா போலீசார் ஒருவழியாக முத்துக்குமார் என்ற பாலியல் குற்றவாளியை தட்டி தூக்கினர்.



# நாயகன் படம் ரீ ரிலீசின் போது, ரோபா சங்கருக்கு வித்தியாசமான அஞ்சலி

பிரபல நடிகர் ரோபோ சங்கர் உடல்நலக்குறைவால் கடந்த செப்டம்பர் 18ம் தேதி உயிரிழந்தார். சில ஆண்டுகளுக்கு முன்பு மஞ்சள் காமாலை காரணமாகக் கடுமையாக அவரின் உடல் நிலை பாதிக்கப்பட்டது. பின்னர், அதிலிருந்து குணமடைந்த ரோபோ சங்கர் மீண்டும் திரைப்படங்களிலும், டிவி நிகழ்ச்சிகளிலும் தலை காட்டத் தொடங்கினார். இந்த நிலையில், மீண்டும் அவரின் உடல் நிலை பாதிக்கப்பட்டு, மரணமடைந்தார். ரோபா சங்கரின் இறப்புக்கு ஏராளமான பிரபலங்கள் இரங்கல் தெரிவித்தனர்.

நடிகர் கமல்ஹாசனின் தீவிர ரசிகர்களில் நடிகர் ரோபோ சங்கரும் ஒருவர். எப்போதெல்லாம் நடிகர் கமல்ஹாசனின் திரைப்படங்கள் வெளியாகிறதோ, அப்போதெல்லாம் ரோபோ சங்கர் போஸ்டர்களுக்கு பாலாபிஷேகம் செய்வது, ஆரத்தி எடுப்பது என கொண்டாடித் தீர்ப்பார். சில சமயங்களில் ரேபோ சங்கரின் சேட்டைகள் அதிகமாகி விடும். இந்தத் தருணங்களில் நடிகர் கமல்ஹாசனே, ரோபோ சங்கரை போனில் திட்டியதும் உண்டு. இதனால், ரோபா சங்கரின் மறைவு கமல்ஹாசனை மிகவும் பாதித்துவிட்டது. அவரின் மறைவையடுத்து "ரோபோ சங்கர்... ரோபோ புனைப்பெயர் தான் என் அகராதியில் நீ மனிதன். ஆதலால் என் தம்பி. போதலால் மட்டும் எனை விட்டு நீங்கி விடுவாயா நீ? உன் வேலை நீ போனாய், என் வேலை தங்கிவிட்டேன். நாளையை எமக்கென நீ விட்டுச் சென்றதால் நாளை நமதே" என்று கமல்ஹாசன் இரங்கல் பதிவிட்டிருந்தார்.

இந்த நிலையில், நாயகன் படத்தின் மறு வெளியிட்டை முன்னிட்டு, நடிகர் ரோபோ சங்கருக்கு வித்தியாசமான முறையில் அஞ்சலி செலுத்த சென்னை கமலா சினிமாஸ் திரையரங்கம் முடிவு செய்தது.

நடிகர் கமல்ஹாசன் நடிப்பில் கடந்த 1987ம் ஆண்டு வெளிவந்த படம் நாயகன். சூப்பர் ஹிட் படமான நாயகன் நாளை (நவ.6) ரீ ரிலீஸ் செய்யப்பட்டது. தீவிர கமல்ஹாசன் ரசிகரான ரோபோ சங்கர் கமல்ஹாசனின் ஒவ்வொரு படத்தையும் சென்னை கமலா சினிமாஸ் தியேட்டரில் முதல் ஆளாக பார்த்து விடுவதை வழக்கமாக கொண்டிருந்தார். ரோபோ சங்கரை வித்தியாசமான முறையில் கௌரவிக்க முடிவு செய்துள்ள கமலா சினிமாஸ், நாயகன் படத்துக்கான முதல் டிக்கெட் ரோபோ சங்கருக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இதையடுத்து, அவரின் குடும்பத்துக்கு டிக்கெட்டுகள் வழங்கப்பட்ட பின்னரே, பிற ரசிகர்களுக்கு டிக்கெட்டுகள் வழங்கப்பட்டது.

படம் பார்த்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய இந்திரஜா ரோபோ ஷங்கர், "நாயகன் படத்தை நான் இன்னைக்குதான் முதல் முறையாக தியேட்டர்ல பார்க்கிறேன். இந்த நேரத்துல வருத்தம் என்பதைத் தாண்டி ஒரு வெற்றிடம் இருக்கு. அப்பா இல்லாதது மட்டுந்தான் ஒரு வெற்றிடம். அவர் இந்த இடத்துல இருந்திருந்தால் கொண்டாட்டமே வேற மாதிரி இருந்திருக்கும். அவரில்லாமல் நான் பாக்குற முதல் படம்ங்கிறதுனால கஷ்டமாகவும் இருக்கு. எப்போதுமே கமல் சார் படத்துக்கு இங்க அப்பாதான் முதல் டிக்கெட் வாங்குவாரு.

இன்னைக்கும் மறக்காமல் முதல் டிக்கெட்டை அப்பாவுக்குக் கொடுத்ததுக்கு கமலா சினிமாஸுக்கு நன்றி.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நடைமுறைக்கு வந்த இ-பாஸ்போர்ட்




இந்தியாவில் பாஸ்போர்ட்சேவையைமேலும் நவீனப்படுத்துவதற்காக இ-பாஸ்போர்ட் ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. தோற்றத்தில் வழக்கமான பாஸ்போர்ட் போலே இருந்தாலும், அதன் பின் அட்டையில் ரேடியோ அதிர்வெண் அடையாளச் சிப் மற்றும் அதனைச் சுற்றிய அன்டெனா பொருத்தப்பட்டிருக்கும்.

இந்த சிப்பில் பயணக் காரரின் பெயர், முகவரி போன்ற அடிப்படை தகவல்களோடு, கைரேகை, முகப்படம் என்பன போன்ற பயோமெட்ரிக் விவரங்களும் மின் வடிவில் சேமிக்கப்படுகின்றன.

பாஸ்போர்டின் முன் பக்கத்தில் பாஸ்போர்ட் எழுத்தின் கீழ் சிறிய தங்கப் போன்ற குறியீட்டு சின்னம் இருப்பதால், இ-பாஸ்போர்டாகும் என்பதைக் கண்டறிய முடியும்.

வழக்கமான பாஸ்போர்டுக்கு யாருக்கு வேண்டுமோ அவர்கள் இ-பாஸ்போர்டுக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் அருகிலுள்ள பாஸ்போர்ட் சேவா மையங்கள் (PSK) அல்லது தபால் அலுவலக பாஸ்போர்ட் சேவா மையங்கள் மூலம் பெறப்படும்.

வழக்கமான பாஸ்போர்ட்டைப் போலவே விண்ணப்ப படிவம் நிரப்பி கட்டணத்தை செலுத்தி, பாஸ்போர்ட் அலுவலகத்தில் நேர்காணல் (appointment) முன்பதிவு செய்ய வேண்டும். நேர்காணல் இன்றும் நடைபெறும் போது கைரேகைகள், புகைப்படம் போன்ற பயோமெட்ரிக் தரவுகள் பதிவு செய்யப்படும். செயலாக்கம் முடிந்த பிறகு, சம்பந்தப்பட்ட முகவரிக்கு இ-பாஸ்போர்ட் அனுப்பப்படும்.

சமீபமாக நீங்கள் வழக்கமான பாஸ்போர்டுக்காகப் பயோமெட்ரிக் தரவுகளை ஏற்கனவே வழங்கி இருந்தால், இ-பாஸ்போர்டுக்கு விண்ணப்பிக்கும் போது அந்த தகவல்கள் மீண்டும் கேட்கப்படாது.

இ-பாஸ்போர்டில் தகவல்கள் டிஜிட்டல் முறையில் பாதுகாப்பாகச் சேமிக்கப்படுவதால், தரவுகளை திருடுதல், சேதப்படுத்துதல் அல்லது போலியான ஆவணத்தை உருவாக்குதல் போன்ற அபாயங்கள் குறைக்கப்படும். அதேசமயம், விமான நிலையங்களில் இந்த சிப்பை ஸ்கேன் செய்து அதிகாரிகள் பயணியின் விவரத்தை உடனே சரிபார்க்க முடியும்; இதனால் விமான நிலையப் பரிமாற்றங்கள் வேகமாகி, பயணிகளின் காத்திருப்பு நேரம் குறையும். மேலும் இ-பாஸ்போர்டுகள் உலகில் பல நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதும் முக்கிய பலனாகும்.

## திருமணத்தில் மொய் வசதிக்கு க்யூஆர் ஸ்கேனர்
## தந்தையின் புதிய யோசனை



திருமணம் என்பது மனித வாழ்க்கையின் மிக முக்கியமான நிகழ்வாகக் கருதப்படுகிறது. குறிப்பாக தென்னிந்தியாவில் திருமண நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள், மணமக்களுக்கு "மொய்" எனப்படும் நிதி உதவியை வழங்குவது ஒரு வழக்கமான நடைமுறையாகும். பொதுவாக, மொய் வழங்கும்போது பணத்தை ஒரு கவரில் வைத்து அளிப்பது வழக்கமாக இருந்து வருகிறது.

ஆனால் சமீபத்தில் நடைபெற்ற ஒரு திருமணத்தில், மொய் வைக்க வரும் விருந்தினர்களுக்கு எளிமையாக இருக்க வேண்டும் என்பதற்காக, மணமகனின் தந்தை தனது சட்டையில் க்யூஆர் ஸ்கேனர் வைத்துக் கொண்டது கவனத்தை ஈர்த்துள்ளது. பணத்தை கவரில் வைத்து வழங்காமல், ஸ்கேன் செய்து உடனடியாக ஆன்லைன் பரிவர்த்தனையாக வழங்கும் வசதியை அவர் ஏற்படுத்தியிருந்தார்.

இந்த புதிய யோசனையைப் பார்த்து விருந்தினர்களும் ஆச்சரியம் மற்றும் பாராட்டை தெரிவித்தனர். சம்பந்தப்பட்ட தந்தையின் வீடியோ சமூக வலைதளங்களில் வேகமாக வைரலாகி வருகிறது.

### வீரத் தீரச் செயல்களுக்கான
## "அண்ணா பதக்கம்" 2026 விருதுக்கான விண்ணப்பங்கள் வரவேற்பு

தமிழகத்தில் வீரத் தீரச் செயல்களை மேற்கொண்ட பொதுமக்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் "அண்ணா பதக்கம்" விருதிற்கான விண்ணப்பங்களை தமிழக அரசு வரவேற்றுள்ளது. இந்த விருது ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தின விழாவில் முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும்.

இந்த விருது, பொதுமக்களிலிருந்து மூவருக்கும் மற்றும் அரசு ஊழியர்களிலிருந்து மூவருக்கும் (சீருடை பணியாளர்கள் உட்பட) வழங்கப்படும். இவ்விருதுக்கு வயது வரம்பு எதுவும் இல்லை. விருதுடன் ரூ.1,00,000/- காசோலை, ஒரு பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கப்படும். 2026 ஆம் ஆண்டுக்கான விருது 26 ஜனவரி 2026 அன்று குடியரசு தின விழாவில் வழங்கப்படும்.

வீரத் தீரச் செயல்களுக்கான அண்ணா பதக்கத்திற்கான விண்ணப்பங்கள் மற்றும் பரிந்துரைகள் https://awards.tn.gov.in என்ற இணையதளத்தில் மட்டுமே பெறப்படும். விண்ணப்பப் படிவத்தில் தேவையான அனைத்து விவரங்களும் தெளிவாக நிரப்பப்பட வேண்டும்.

பரிந்துரைக்கப்படும் நபரின் வீரத் தீரச் செயல்களை விளக்கும் தகுதியுரை அதிகபட்சம் 800 வார்த்தைகளுக்குள் இருக்க வேண்டும். விண்ணப்பிக்க கடைசி தேதி 15 டிசம்பர் 2025 என அறிவிக்கப்பட்டுள்ளது. இணையதளம் மூலம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களே பரிசீலிக்கப்படும்; காலாவதியான விண்ணப்பங்கள் ஏற்கப் படமாட்டாது.

தகுதியானவர்களை தேர்வு செய்ய அரசால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழு விசாரணை செய்து இறுதி முடிவை எடுக்கும் என பொதுத்துறை தெரிவித்துள்ளது.

## சென்னை ஐ.ஐ.டி.யில் குறைந்த செலவில் புதிய ரத்த சர்க்கரை கண்காணிப்பு சாதனம் உருவாக்கம்




நீரிழிவு நோயாளிகளின் ரத்த சர்க்கரை அளவை குறைந்த செலவில், துல்லியமாக கண்காணிக்க உதவும் புதிய குளுக்கோஸ் கண்காணிப்பு சாதனத்தை சென்னை ஐ.ஐ.டி. ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். இது, தற்போது உள்ள சாதனங்களுடன் ஒப்பிடும் போது மலிவானது, நீண்ட காலம் செயல்படும் தன்மை கொண்டது என்பதே குறிப்பிடத்தகுந்த அம்சமாகும்.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் 2023-ஆம் ஆண்டில் வெளியிட்ட அறிக்கையின்படி, நாட்டில் 10.1 கோடி மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ரத்த சர்க்கரை அளவை அடிக்கடி பரிசோதிக்க வேண்டிய நோயாளிகளுக்கு, பரிசோதனை சாதனங்களின் அதிக விலை மற்றும் அதன் பயன்பாட்டு நீடிப்பு ஆகியவை முக்கிய சவால்களாக இருந்துவருகின்றன.

தற்போது அதிக மானோர் சுயபரிசோதனை குளுக்கோஸ் மீட்டர் பயன்படுத்துகிறார்கள். அதிக துல்லியத்திற்கு சிலர் தொடர்ச்சியான குளுக்கோஸ் கண்காணிப்பு சாதனங்களை பயன்படுத்துகின்றனர். ஆனாலும், இவை உயர்ந்த விலையுள்ளதால் பலருக்கு அணுக முடியாத நிலையில் உள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வாக, சென்னை ஐ.ஐ.டி. மின்னணு பொருட்கள் மற்றும் மெல்லிய படல ஆய்வகத்தின் பேராசிரியர் பரசுராமன் சுவாமிநாதன் தலைமையிலான ஆராய்ச்சிக் குழு, குறைந்த செலவில் புதிய குளுக்கோஸ் கண்காணிப்பு சாதனத்தை உருவாக்கியுள்ளது. நீண்ட கால பயன்முடிவு, நம்பத்தகுந்த தரவு வழங்குதல், துல்லியமான செயல்திறன் ஆகியவை இதன் முக்கிய பலன்களாகக் கூறப்படுகிறது.

இக்கண்டுபிடிப்பிற்கான காப்புரிமையை (Patent) சென்னை ஐ.ஐ.டி. பெற்றுள்ளது. இதை வர்த்தக அளவில் உற்பத்தி செய்து மருத்துவப் பயன்பாட்டில் அறிமுகப்படுத்துவதற்கான பணிகள் விரைவில் தொடங்க உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சாதனம் பயன்பாட்டுக்கு வந்தால், நீரிழிவு நோயாளிகளுக்கு குறைந்த செலவில் மேம்பட்ட மருத்துவ கண்காணிப்பு வசதி கிடைக்கும் என மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.



## உலகிலேயே மதுபானப் பிரியர்கள் அதிகம் உள்ளவர்களில் இந்தியா முதலிடம்

ஒருகாலத்தில் மேலை நாடுகளின் கலாச்சாரமாகக் கருதப்பட்ட மதுபானம், இன்று இந்திய சமூகத்திலும் பெருமளவில் பரவியுள்ளது. ஆண்கள், பெண்கள் என பாலின பேதமின்றி, மதுபானம் அருந்துவது சாதாரணமான ஒன்றாக மாறி வருகிறது. இதன் விளைவாக, இந்தியா தற்போது உலகில் மதுபானம் அதிகம் நுகரும் நாடுகளில் ஒன்றாக உயர்ந்துள்ளது. உலகளவில் ஆல்கஹால் நுகர்வை ஆய்வு செய்த நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கையின்படி, கடந்த ஜனவரி முதல் ஜூன் மாதம் வரை இந்தியாவில் மதுபான பயன்பாடு 7 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த ஆறு மாத காலத்தில் மட்டும் 44 கோடி லிட்டர் மதுபானங்கள் நுகர்க்கப்பட்டுள்ளன.

அறிக்கையில் மேலும், விஸ்கி விற்பனை 7 சதவீதம், வோட்கா 10 சதவீதம், ரம் 2 சதவீதம், ஜின் 3 சதவீதம் உயர்ந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் தயாராகும் மதுபானங்கள் தரம் உயர்ந்ததாகவும், விலை குறைவாகவும் இருப்பதால் மக்களிடையே அதற்கான தேவை அதிகரித்து வருகிறது. இதன் விளைவாக, இந்தியா தற்போது உலகின் மிகப்பெரிய மதுசந்தைகளில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இதே வளர்ச்சி தொடருமானால், 2027 ஆம் ஆண்டில் ஜப்பானையும், 2033 ஆம் ஆண்டில் ஜெர்மனியையும் முந்தி, உலகின் 5-வது பெரிய மதுபான நுகர்வு நாடாக இந்தியா மாறும் என ஆய்வு தெரிவிக்கிறது. சமூக நல நிபுணர்கள், மதுபான நுகர்வின் இந்த வேகமான உயர்வு உடல் நலம், குடும்ப உறவுகள் மற்றும் பொருளாதார நிலைமை போன்ற துறைகளில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என எச்சரித்துள்ளனர். அதனால், மதுபானம் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவது காலத்திற்கேற்ற அவசியமாகும் என அவர்கள் வலியுறுத்துகின்றனர்

## கோவை அவிநாசி சாலை மேம்பாலத்தில் வழிகாட்டி பலகையில் கிலோமீட்டர் வேண்டும்

### கோவை கன்ஸ்யூமர் வாய்ஸ் அமைப்பு கோரிக்கை




அவிநாசி சாலை உயர்மட்ட மேம்பாலத்தில் இன்று நெடுஞ்சாலைத் துறை மூலம் புதிய வழிகாட்டி தகவல் பலகைகள் நிறுவப்பட்டுள்ளன. கோல்டு வின்ஸ் பகுதியிலிருந்து உப்பிலிபாளையம் நோக்கி செல்லக்கூடிய இறங்குதளங்களில் இப்பலகைகள் வைக்கப் பட்டுள்ளன.

எனினும், அந்தப் பலகைகளில் கிலோமீட்டர் தூர விவரங்கள் குறிப்பிடப்படாததால் வாகன ஓட்டிகளுக்கு குழப்பம் ஏற்பட்டுள்ளது.

உயர்மட்ட மேம்பாலத்தில் பயணிக்கும் போது, எந்த இறங்குதளம் எந்த இடத்துக்கு, எத்தனை தூரத்தில் உள்ளது என்பது தெளிவாக தெரியாத நிலையால், தவறான பாதைகளில் சென்று மீண்டும் திரும்ப வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த பிரச்சினையைத் தொடர்ந்து, கோவை கன்ஸ்யூமர் வாய்ஸ் அமைப்பின் செயலாளர் நா.லோகு, நெடுஞ்சாலைத் துறை கோட்ட பொறியாளருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்துள்ளார். அதில், மேம்பாலத்தில் வைக்கப்பட்டுள்ள அனைத்து வழிகாட்டி பலகைகளிலும் கிலோமீட்டர் தூர விவரங்களை தெளிவாக குறிப்பிடும் வகையில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

வாகன ஓட்டிகளின் பாதுகாப்பும் பயணத் தெளிவும் கருதி, நெடுஞ்சாலைத் துறை விரைவில் உரிய திருத்த நடவடிக்கை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கேரளாவில் இருவருக்கு தலா 180 ஆண்டு சிறைத்தண்டனை

கேரளாவின் மலப்புரம் பகுதியில், 11 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய உதவிய தாய் மற்றும் அவரது காதலருக்கு தலா 180 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் அதிரடி தீர்ப்பளித்துள்ளது. போக்சோ சட்டத்தின் கீழ் இந்த கடுமையான தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

திருவனந்தபுரத்தைச் சேர்ந்த அந்த பெண், தன் கணவரை விட்டு, தனது சிறுமையான மகளுடன் காதலருடன் சேர்ந்து மலப்புரத்திற்கு குடிபெயர்ந்து வாடகை வீட்டில் வசித்துவரினார். இந்நிலையில், 2019 முதல் 2021 வரை, அந்த ஆண் சிறுமியை பலமுறை பாலியல் துஷ்பிரயோகம் செய்தது விசாரணையில் உறுதியாகியது.

அதிலும் அதிர்ச்சியளிப்பது, அந்த தாய் இந்த குற்றத்திற்கு உடந்தையாக இருந்தது. துஷ்பிரயோகத்திற்கு முன்பு சிறுமிக்கு மதுவும் கொடுத்து, தனது காதலருக்கு ஆதரவாக செயல்பட்டது தெளிவாக நிரூபிக்கப்பட்டது.

வழக்கு நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, இருவரும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர். இதனையடுத்து, நீதிபதி இருவருக்கும் தலா 180 ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் 11.7 லட்சம் ரூபாய் அபராதம் விதித்தார்.

அபராதத்தை செலுத்த தவறினால், மேலும் 20 ஆண்டுகள் கூடுதல் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சிறுமிகளை பாதுகாக்க வேண்டிய பெற்றோர் தானே அவர்களின் வாழ்க்கையை சீரழிக்க உடந்தையாக இருந்த இந்த சம்பவம், சமூகத்தில் கடும் அதிர்வை உருவாக்கியுள்ளது.

## எதிரி நாட்டு ரேடாரில் புலப்படாத தேஜாஸ் விமானம் டி.ஆர்.டி.ஓ புதிய தொழில்நுட்பம் வடிவமைப்பு

இந்தியாவின் தேஜாஸ் போர் விமானத்தை மேலும் மேம்படுத்தி, எதிரி நாடுகளின் ரேடார் கண்காணிப்பில் புலப்படாத வகையில் மாற்றும் பணியில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டி.ஆர்.டி.ஓ) ஈடுபட்டு வருகிறது.

இந்தியாவின் பொதுத்துறை விமான உற்பத்தி நிறுவனம் இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (எச்.ஏ.எல்.) தேஜாஸ் விமானங்களை தயாரித்து வருகிறது.

தேஜாஸ் எம்கே1A எனப்படும் இந்த உள்நாட்டு இலகுரக போர் விமானத்தில் பாதுகாப்பு திறனை உயர்த்தும் நோக்கில் "ஸ்வயம்ரக்ஷாகவாச்" எனப்படும் புதிய பாதுகாப்புக் கட்டமைப்பு இணைக்கப் படுகிறது.

இந்த தொழில்நுட்பம், எதிரி ரேடாரில் விமானம் காணப்படாமல் மறைத்தல், ஏவுகணை தாக்குதலிலிருந்து பாதுகாத்தல் எனும் இரு முக்கிய செயல்பாடுகளையும் மேற்கொள்கிறது.

இத்தொழில்நுட்பத்தை டி.ஆர்.டி.ஓ வின் வான்படைக் கருவிகள் ஆராய்ச்சி மையம் உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. இது 2026 ஆம் ஆண்டுக்குள் முழுமையாகப் பயன்படுத்தப்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த செப்டம்பர் மாதத்தில், 68 ஒரே இருக்கை விமானங்கள் மற்றும் 29 இரட்டை இருக்கை விமானங்கள் என மொத்தம் 97 தேஜாஸ் எம்கே1A விமானங்களை வழங்குவதற்கான ஒப்பந்தத்தை எச்.ஏ.எல். நிறுவனம் மத்திய அரசிடம் இருந்து பெற்றுள்ளது.

தேசிய பாதுகாப்பு வலிமையை உயர்த்துவதில் இத்திட்டம் முக்கியமான மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

# இறைவன் அருளால் கண்ணொளி பெற்ற தண்டியடிகள் நாயனார்

**தி கோவை ஹெரால்டு**



சோழமண்டலத்தில்திருவாரூரில் தண்டியடிகள் நாயனார் என்ற ஒருவர் வாழ்ந்தார். அவர் பிறவிக் குருடர். ஆனாலும், தனது அகக் கண் வழியே சிவபெருமானை உணர்ந்து, நாள்தோறும் மிகுந்த பக்தியுடன் "ஓம் நமசிவாய" எனும் ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபித்து வந்தார். அவர் அந்தத் திருப்பதியில் உள்ள திருக்கோயிலை அடிக்கடி வலம் வந்து வணங்குவார்.

ஒருநாள், அந்த ஆலயத்தின் மேற்குபக்கத்தில்உள்ளதிருக்குளம் சமணர்களின் தாக்கத்தால் சீரழிந்து கிடப்பதை அவர் கவனித்தார். திருக்குளத்தை மறுபடியும் பெருகச் செய்ய வேண்டும் என்று உறுதி செய்து, கயிறு, தறி, மண்வெட்டி, கூடை போன்ற கருவிகளைப் பயன்படுத்தி தனியாகவே தினமும் திருக்குளத்தை சுத்தம் செய்யத் தொடங்கினார்.

இந்தக் கர்மத்தை கண்ட சமணர்கள் பொறாமை கொண்டு தண்டியடிகளைத் தடுத்து, "திருக்குளத்தில் மண் எடுப்பது பாவம்" என கூறினர். அதற்கு தண்டியடிகள், "இது சிவபெருமானுக்கான புண்ணியம்; உங்களுக்குத் தெரியாது" என்று பதிலளித்தார். இதைக்கேட்டு சமணர்கள், "நீ குருடாக இருப்பதால் எதையும் அறிய மாட்டாய்" என்று கேலியாக பேசினர்.

அந்த கிண்டலால் தண்டியடிகள் உண்டான கோபத்தில், "சிவபெருமானின் அருளால் நான் கண் பெற்றும், நீங்கள் கண் இழந்தும் போனால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார். அதற்கு சமணர்கள், "அப்படியானால் நாங்கள் இவ்வூரை விட்டு வெளியேறுவோம்" என்றனர். பின்னர் அவர்கள் தண்டியடிகளின் கருவிகளை பறித்து எறிந்தனர்.

மிகுந்த துயரத்திலும் வேதனையிலும் தண்டியடிகள் கோயில் வாசலுக்கு வந்து சிவபெருமானை அர்த்தப்பூர்வமாகப் பிரார்த்தித்தார். அன்றிரவு, சிவபெருமான் அவருக்குச் சொப்பனத்தில் தோன்றி, "நாளை உனக்கு பார்வை கொடுப்பேன்; சமணர்களின் கண்கள் மறையும்" என்று அருளி மறைந்தார்.

அதே இரவு, சோழராஜாவிற்கும் கனவில் சிவபெருமான் தோன்றி, தண்டியடிகளை உதவும்படி கூறினார். மறுநாள் அரசன் தண்டியடிகளிடம் சென்று சம்பவத்தை கேட்டார். அரசன் சமணர்களையும் அழைத்து உண்மையை உறுதிப்படுத்தினார். அவர்கள் தங்கள் சொன்ன வாக்கில் நிலைத்தனர்.

அரசன் முன்னிலையில் தண்டியடிகள் திருக்குளத்தில் இறங்கி, "ஓம் நமசிவாய" எனப் பஜனை செய்து நீரிலிருந்து மேலே வந்தபோது இரு கண்களும் திறந்திருந்தது. இதைக் கண்ட சமணர்கள் மயங்கி குழம்பியவுடன், அவர்களுக்கு குருட்டுத்தனமும் ஏற்பட்டது. உடனே அவர்கள் திருவாரூரை விட்டு ஓடினர்.

இவ்வாறு, சமணர்களின் தவறும் தண்டியடிகளின் பக்தியும் உலகம் அறிந்தது.

பின்னர் சோழராஜா சமணர்களின் பள்ளிகளை அகற்றி, திருக்குளத்தைச் சரிசெய்து, தண்டியடிகளைப் புகழ்ந்தார். கண்களின் வெளிச்சமும் அகத்தின் வெளிச்சமும் பெற்ற தண்டியடிகள் தொடர்ந்து இறைபணி செய்து இறுதியில் சிவபதம் அடைந்தார்.

# கோவை கோஆப்டெக்ஸ் மருதம் விற்பனை நிலையத்தில் புடவைகள் மேளா

## சிறப்புத் தள்ளுபடி விற்பனை தொடக்கம்



**தி கோவை ஹெரால்டு**

கோவை கோஆப்டெக்ஸ் மருதம் விற்பனை நிலையத்தில் புடவைகள் மேளா சிறப்புத் தள்ளுபடி விற்பனை அண்மையில் தொடங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கோஆப்டெக்ஸ் முதுநிலை மண்டலமேலாளர் பி. அம்சவேணி மற்றும் முதுநிலை மேலாளர் (வடிவமைப்பு மற்றும்உற்பத்தி) கோ.ஜெகநாதன் ஆகியோர் முதல்விற்பனையைத்தொடங்கிவைத்தனர். மருதம் விற்பனை நிலைய மேலாளர்கள் செல்வதுரை, விஜயானந்த் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து கோஆப்டெக்ஸ் மருதம் விற்பனை நிலையமுதுநிலைமண்டல மேலாளர் பி. அம்சவேணி கூறியதாவது:

"கோஆப்டெக்ஸ் நிறுவனத்தின் புடவைகள் மேளா அக்டோபர் 31 முதல் நவம்பர் 30 வரை நடைபெறுகிறது. இதில் காஞ்சிபுரம், ஆரணி பட்டுப் புடவைகள், கோரா காட்டன் சேலைகள், நெகமம் காட்டன் சேலைகள், ஆயிரம் புட்டா சேலைகள், புதினம்காட்டன்சேலைகள், செடி புட்டா சேலைகள், செட்டிநாடு காட்டன் சேலைகள், திருபுவனம் பட்டு சேலைகள், மென்பட்டு சேலைகள், இயற்கைசாயமிட்டபருத்தி சேலைகள், காஞ்சிகாட்டன் சேலைகள், பரமக்குடி காட்டன் சேலைகள், சுங்குடி சேலைகள், சேலம் பட்டுப் புடவைகள், ஜெயங்கொண்டம் காட்டன் சேலைகள், சேலம் பிளாக் பிரிண்ட் காட்டன் புடவைகள் மற்றும் முகூர்த்த பட்டுப் புடவைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான சேலைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன," என்றார்.

மேலும் அவர் கூறியதாவது: "வாடிக்கையாளர் களின் வசதிக்காக ஞாயிறு உள்பட அனைத்து விடுமுறை நாட்களிலும் மருதம் விற்பனை நிலையம் செயல்படும். மாதாந்திர சேமிப்பு திட்டம் ரூ.300-இல் இருந்து தொடங்குகிறது. வாடிக்கையாளர்கள் 11 மாத சந்தா தொகையை செலுத்தினால், 12-வது மாத சந்தா தொகையை கோஆப்டெக்ஸ் நிறுவனம் வழங்கும். கூடுதல் முதிர்வுத் தொகைக்கு வாடிக்கையாளர்கள் துணிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

சேமிப்பு திட்ட வாடிக்கையாளர்களுக்காக ஆண்டு முழுவதும் 30 சதவீதம் சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படும்," என தெரிவித்தார்.

# கோவை மாணவி வன்கொடுமை வழக்கில் குற்றவாளிகளை விரைந்து கைது செய்த காவல்துறைக்கு பாராட்டு – ஜெ.முகமது ரபிக்

**தி கோவை ஹெரால்டு**

கோவை விமான நிலையம் பின்புறம் கல்லூரி மாணவியின் மீது நடைபெற்ற வன்புணர்வு சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளை, கோவை மாநகர தனிப்படை போலீசார் சுற்றிவளைத்து சுட்டு பிடித்தது பாராட்டத்தக்கது என தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய உறுப்பினரும், பல சமய நல்லுறவு இயக்கத் தலைவருமான ஜெ. முகமது ரபிக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், "குற்றம் நடைபெற்ற 24 மணி நேரத்திற்குள் குற்றவாளிகளை கண்டறிந்து கைது செய்திருப்பது, இனி இப்படிப் பட்ட குற்றங்களை மேற்கொள்ள முயல்வோருக்கு கடும் எச்சரிக்கையாக அமையும்" என தெரிவித்துள்ளார்.

மேலும், பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் இடம்பெறும் போது, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் காவல்துறையை உடனடி மற்றும் தீவிரமான நடவடிக்கைக்கு உத்தர விடுவது, பெண்கள் பாது காப்புகுறித்தநம்பிக்கையை மக்களிடையே உருவாக்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"தமிழகத்தில் பெண்கள் பாதுகாப்பை உறுதிப் படுத்தும்வகையில்முதல்வர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும், அதனை செயல்படுத்தும் காவல்துறையின் விழிப்புணர்வான பணியையும் பாராட்டுவது எனது கடமை" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நடைபெறாத வகையில், குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையை விரைந்து வழங்க வேண்டும் எனவும் ஜெ. முகமது ரபிக் வலியுறுத்தியுள்ளார்.

# விமான டிக்கெட் முன்பதிவில் புதிய சலுகை

## இலவச ரத்து செய்ய அனுமதி




நாடு முழுவதும் விமானப் பயணிகள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.ஒருகாலத்தில் பணக்காரர்கள் மட்டுமே பயன்படுத்தியதாகக் கருதப்பட்ட விமானப் பயணம், தற்போது நடுத்தர மக்களிடேயும் பிரபலமடைந்து வருகிறது. இதனை முன்னிட்டு, மத்திய அரசு பல்வேறு நகரங்களுக்கு இடையிலான விமான சேவைகளை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், பயணிகளின் வசதியை கருத்தில் கொண்டு, சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் விமான டிக்கெட் முன்பதிவுக்கு புதிய வரைவு விதிமுறைகளை அறிவித்துள்ளது. அதன் படி, எந்த கூடுதல் கட்டணமும் இன்றி, முன்பதிவு செய்யப்பட்ட விமானடிக்கெட்டுகளை இரண்டுநாட்களுக்குள் பயணிகள் ரத்து செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய விதி நடைமுறைப்படுத்தப்பட்டால், பயணத் திட்டத்தில் திடீர் மாற்றம் ஏற்பட்டாலும், பயணிகள் எந்த நஷ்டமும் இன்றி டிக்கெட்டை ரத்து செய்யும் வாய்ப்பு கிடைக்கும். இதன் மூலம் பயணிகள் சிரமமின்றி விமான முன்பதிவுகளை செய்ய முடியும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமானசேவைகளின் அணுகல்திறன் அதிகரித்துவரும் இந்த சூழலில், பயணிகளுக்கு கூடுதல் நன்மையளிக்கும் இந்த முடிவு வரவேற்கத்தக்கதாகும்.

# விவாகரத்தான மகளுக்கும் சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதிய உரிமை: சென்னை உயர் நீதிமன்றம் முக்கிய தீர்ப்பு

சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதிய திட்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், விவாகரத்து பெற்ற மகள்களுக்கும் ஓய்வூதிய உரிமை வழங்கப்பட வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் முக்கிய தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது.

ஒரு விடுதலைப் போராட்ட வீரரின் விவாகரத்து பெற்ற மகள், தந்தை மறைவுக்குப் பிறகு அவர் பெற்றுவரும் ஓய்வூதியத்தை வாரிசாகப் பெற விண்ணப்பித்தார். ஆனால், அவர் திருமணம் ஆன பெண் என்பதைக் காரணம் காட்டி அவர் விண்ணப்பம் அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டது. இதனை எதிர்த்து அவர் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

இந்தவழக்கைவிசாரித்த நீதிபதி, "திருமணமான பெண்களுக்கு ஓய்வூதிய உரிமை இல்லை என்பது நியாயமற்ற பாகுபாடு" என்று கண்டித்தார். மேலும், விவாகரத்துக்குப் பிறகு அந்தப் பெண் தனியாக வாழும் நிலைக்கு திரும்புவதால், அவர் பெற்றோரின் ஆதரவு தேவைப்படுவது இயல்பு எனவும் குறிப்பிட்டார்.

நீதிமன்றம் தனது தீர்ப்பில், மத்திய அரசு வழங்கிய வழிகாட்டுதல்களில் பெண்களுக்கு எதிரான பாகுபாடு நீடிக்கிறது, அந்த விதிமுறையை மறுபரிசீலனை செய்ய வேண்டும், விவாகரத்து பெற்ற மகள்களுக்கு தந்தையின் ஓய்வூதியத்தில் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

சமூக நோக்கில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் இந்த தீர்ப்பு, பெண்களின் வாழ்வாதார உரிமையை பாதுகாக்கும் முக்கிய முன்னேற்றமாக பார்க்கப்படுகிறது. குறிப்பாக, வாழ்க்கை சிரமங்களில் இருக்கும் விவாகரத்தான பெண்களுக்கு இது ஒரு பெரிய நம்பிக்கையைக் கொடுக்கக்கூடும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பாராட்டி வருகின்றனர்.



# திமுகவினர் தலையீடு இல்லாமல் எஸ்ஐஆர் பணிகளை மேற்கொள்ள வேண்டும்

## எஸ்.பி.வேலுமணி தலைமையில் அதிமுக எம்.எல்.ஏக்கள் ஆட்சியரிடம் மனு



கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவரிடம் மனு அளித்த முன்னாள் அமைச்சர் எஸ் பி வேலுமணி, அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் அம்மன் அர்ச்சுணன், பி ஆர் ஜி அருண்குமார் ஆகியோர்.

தி கோவை ஹெரால்டு

சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்த பணியில் ஆறு மணிக்கு மேலும் அதிகாரிகள் பணிகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்பிவேலுமணி, அம்மன் அர்ஜுனன், பிஆர்ஜி அருண் குமார் ஆகியோர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

தொடர்ந்துசெய்தியாளர்களுக்கு பேட்டியளித்த முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலு மணி கூறியதாவது, எஸ்.ஐ.ஆர் திட்டத்தின் கீழ் அதிகாரிகள் வீடுவீடாக சென்று மனு படிவங்களை கொடுத்து வருகின்றனர், அந்த மனுக்களை சம்பந்தபட்ட அதிகாரிகளிடம் இருந்து தான மக்களிடம் இருந்து திரும்ப பெற வேண்டும்.

பலBLAஏஜெண்ட்டுகள் ஆளும்கட்சியைசேர்ந்தவர்களாக உள்ளார்கள். அவர்கள்தங்களுக்கு சாதகமான மனுக்களை மட்டும் வைத்துவிட்டு, மற்றவற்றை தூக்கி வீசி விடுவதாக தகவல் வெளியாகிறது. எனவே, அதிகாரிகள் தான் படிவங்களை திரும்ப பெற வேண்டும் .

பல இடங்களில் கூலி வேலைகளுக்கு செல்வோர் வேலை முடிந்து 6 மணிக்கு மேல் தான் வீட்டிற்கு வருவார்கள். எனவே அதிகாரிகள் ஆறு மணிக்கு மேலும் வீடு வீடாகச் சென்று இந்த பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

சில இடங்களில் அதிகாரிகளுடன் சென்று திமுகவினர் படிவம் வழங்குகிறார்கள். நடுநிலைமையுடன் இந்த பணிகளை அதிகாரிகள் செய்ய வேண்டும்.

வாக்குகளை சேர்ப்பது நீக்குவதுபோன்றபணிகளை திமுகவினர் எப்பொழுதும் மேற்கொள்வார்கள். இது போன்றவற்றை செய்யக் கூடாது என்பதற்காகதான் தேர்தல் ஆணையம் இந்த திட்டத்தை கொண்டு வந்துள்ளது.

கோவையில் கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் கோவை காவல்துறை கோட்டை விட்டுவிட்டது. ரோந்து பணிகளை காவல் துறை மேற்கொள்வதே இல்லை. இது போன்ற சம்பவத்திற்கு முக்கிய காரணம் எங்கு பார்த்தாலும் மது கடைகள் இருப்பதும் கஞ்சாவும் தான். எடப்பாடியார் ஆட்சியில் கோவையில் ஆர் எஸ் புரம் போலீஸ் ஸ்டேஷன் நம்பர் ஒன் போலீஸ்ஸ்டேஷன் என விருதுகள் வாங்கினார்கள். அம்மா (ஜெயலலிதா) ஆட்சியிலும் எடப்பாடியார் ஆட்சியிலும் காவல்துறை சிறப்பாக செயல்பட்டார்கள். ஆனால் தற்பொழுது காவல்துறையினரின் கைகள் கட்டப்பட்டுள்ளது.

காவல்துறை சுதந்திரமாக செயல்பட வேண்டும். இனி இது போன்ற ஒரு தவறுகள் ஏற்படக்கூடாது .

காவல்துறை பொது மக்கள் வரிப்பணத்தில் சம்பளம் வாங்குகிறார்கள். எனவே, யாருக்கும் அடிபணியாமல் நடுநிலைமையோடு மக்களுக்கு பணியாற்ற வேண்டும். மது கஞ்சா முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் அப்பொழுது தான் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாது.

கோவைமாவட்டத்திற்கு வெளிநாட்டவர்கள் தொழில் செய்ய வருகிறார்கள். தொழிற்சாலைகளும் மருத்துவமனைகளும் நிறைந்துள்ளது. திமுக ஆட்சியில் எந்த திட்டங்களையும் கொண்டு வரவில்லை. நகரில் சட்டம் ஒழுங்கும் சரி இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு ஆம்னி பஸ் சேவை ரத்து

சென்னை, கோவை, மதுரை எனப் பல பகுதியிலிருந்து கேரளாவிற்கு தனியார் ஆம்னிபேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் கடந்த 7ம் தேதி கேரளா மாநிலத்திற்குச் சென்ற தமிழ்நாடு பதிவுஎண் கொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஆம்னிபேருந்துகள் கேரளா போக்குவரத்து துறையினரால் திடீரெனத் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றில் பயணம் செய்த பயணிகளையும் நடுவழியிலேயே இறக்க விட்டதால், அவர்கள் சிரமத்திற்குள்ளாகியிருக்கின்றனர்.



சிறைபிடிக்கப்பட்ட வாகனங்களில் 30க்கும் மேற்பட்ட வாகனங்களுக்குத் தலா 2 லட்சம் வரை அபராதம் என மொத்தம் ரூ.70 லட்சம் வரை அபராதம் விதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் இரு மாநில அரசும் பேச்சுவார்த்தை நடத்தி நல்ல முடிவு எட்டும் வரை தமிழ்நாடு ஆம்னி பேருந்துகள் உரிமையாளர் சங்கம் சார்பில் தமிழகத்திலிருந்து கேரளா மாநிலத்திற்கு இயக்கப்படும் நூற்றுக்கு மேற்பட்ட ஆம்னி பேருந்துகளை இயக்குவதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதனால் இரு மாநிலங் களுக்கு இடையேயான பொது போக்குவரத்து பாதிக்கப்படும் நிலையும், ஐயப்பன் கோவிலுக்குப் பக்தர்கள் செல்லும் சீசன் நெருங்குவதால் அதுவும் பாதிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. தமிழ்நாடு மட்டுமல்ல கர்நாடக உள்ளிட்ட பிற மாநில பேருந்துகளும் கேரள போக்குவரத்துத் துறையால் சிறைபிடிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டிருக் கிறது.

கேரளாவின் கட்டாய மாநில சாலை வரிகளைச் செலுத்தாமல் பல ஆம்னி பேருந்துகள் பிற மாநிலங்களிலிருந்து வந்து கேரளா சாலையைப் பயன்படுத்துவதாக கடந்த சில மாதங்களாகவே எச்சரிக்கை விடுத்து வந்தது கேரள மோட்டார் வாகனத் துறை. கேரள மோட்டார் வாகனத் துறை நடத்திய சோதனையில் தமிழ்நாட்டு மற்றும் பிற மாநிலங்களைச் சேர்ந்த பல பேருந்துகள், மாநில சாலை வரிகளைச் செலுத்தாமல் இயக்கப்படுவதைக் கண்டறிந்து அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சிரமத்திற்குள்ளான பயணிகள் உரிய இடத்தில் தங்களை இறக்கிவிடச் சொல்லியும், இல்லையென்றால் டிக்கெட் பணத்தைத் திரும்பத் தரச் சொல்லியும் சம்பவ இடத்திலேயே ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர். எனினும், பலன் இல்லை.

தமிழ்நாடு ஆம்னி பேருந்துகள் உரிமையாளர் சங்கம், இவ்வளவு பெரிய தொகையை உரிமையாளர்களால் செலுத்த முடியாது. தமிழ்நாடு அரசு பேச்சுவார்த்தை நடத்தி நல்ல முடிவை எடுக்க வேண்டும். அதுவரை கேரளாவிற்கு ஆம்னி பேருந்துகள் இயங்காது" என்று தெரிவித்திருக்கிறது.

# கோவை கேபிஆர் பொறியியல் கல்லூரியில் காலநிலை நடவடிக்கை 2 நாள் தேசிய கருத்தரங்கு

தி கோவை ஹெரால்டு



கேபிஆர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை, இந்திய உலக விவகாரக் கவுன்சில் நிதியுதவியுடன் "காலநிலை நடவடிக்கை மற்றும் பசுமை செயல்பாடுகள்: நிலையான வளர்ச்சி மற்றும் உலகளாவிய கூட்டாண்மைகளில் இந்தியாவின் தலைமை" என்ற தலைப்பில் இரண்டு நாள் தேசிய கருத்தரங்கினை நடத்தியது.

இந்திய உலக விவகாரக் கவுன்சில் ஆராய்ச்சியாளர் அவ்னி சப்லோக், உலகளாவிய உறவுகளை வலுப்படுத்துவதில் இந்தியாவின் பங்கு மற்றும் வெளியுறவுக் கொள்கையில் கவுன்சிலின் பங்களிப்பை விளக்கினார். சுற்றுச்சூழல் ஆர்வலர் கே. காளிதாசன், காலநிலை மாற்றம் சுற்றுச்சூழல் அமைப்புகளை மாற்றி அமைக்கும் வகையில் பாதிப்புகளை ஏற்படுத்திவருவதை எடுத்துரைத்தார்.

முன்னாள் தலைமைப் பொறியாளர் கே. இளங்கோவன், பாரம்பரிய அறிவும் நவீன தொழில்நுட்பமும் இணைந்தால் நிலையான வளர்ச்சி இலக்குகளை திறம்பட அடையலாம் என்றார். தமிழக காலநிலை மாற்ற இயக்கத்தின் ஜி. சுந்தரராஜன், தேசிய காலநிலைப் கொள்கையின் வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தினார். பிஎஸ்ஜி தொழில்நுட்பக் கல்லூரி பேராசிரியர் முனைவர் இப்ராஹிம் பாதுஷா, நிலையான நகர்ப்புற வளர்ச்சிக்கும் கழிவு மேலாண்மைக்கும் வட்ட அணுகுமுறைகள் தேவைப்படும் என வலியுறுத்தினார்.

# தலைமை அலுவலகத்தை விற்ற நிசான் நிறுவனம்




நிசான் நிறுவனம் ஜப்பானில் உள்ள அதன் யோகோஹாமா தலைமையகக் கட்டிடத்தை ரூ.5,598 கோடி விலைக்கு விற்றுள்ளதாக அறிவித்துள்ளது. டோக்கியோவைச் சேர்ந்த ரியல் எஸ்டேட் நிறுவனமான எம்.ஜே.ஐ கோடோ கைஷாவுக்கு இந்த கட்டிடம் விற்கப்பட்டுள்ளது. இந்த விற்பனையின் மூலம் நிசான் நிறுவனம் 73.9 பில்லியன் யென் (ரூ.4,265 கோடி) லாபம் ஈட்டியுள்ளது.

எனினும், நிசான் தொடர்ந்து இந்த கட்டிடத்தை அதன் தலைமையகமாக குத்தகைக்குஎடுத்துஇயங்கும். விற்பனை மூலம் கிடைத்த நிதியைப் பயன்படுத்தி, தங்கள் உள்கட்டமைப்புகளை நவீனமயமாக்க நிசான் திட்டமிட்டுள்ளது. குறிப்பாக, செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படை யிலான அமைப்புகள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் பணிகளை விரைவுபடுத்துவதன் மூலம் நிறுவனத்தின் செயல்பாடுகளை மேம்படுத்த இது உதவும் என்று நிசான் தெரிவித்துள்ளது. குத்தகை விவரங்கள் வெளியிடப்படவில்லை. எம்.ஜே.ஐ கோடோ கைஷா என்பது மின்ட் குழுமத்திற்குச் சொந்தமான ஒரு சிறப்பு நோக்க அறக்கட்டளை ஆகும். மின்ட் குழுமம் ஒரு முன்னணி வாகன உதிரிபாகங்கள் தயாரிப்பு நிறுவனம் ஆகும். அதன் பங்குகள் ஹாங்காங் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்த கடந்த 2024-25ஆம் நிதியாண்டில் 670.9 பில்லியன் யென் (ரூ.38,720 கோடி) நஷ்டத்தை நிசான் சந்தித்தது. இதனால், நிசான் நிறுவனம், லாபகரமான நிலைக்குத் திரும்ப கடுமையாகப் போராடி வருகிறது. இந்த சூழ்நிலையில், இந்த ஆண்டில் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாகப் பொறுப்பேற்ற இவான் எஸ்பினோசா தலைமையில் ஒரு மறுமலர்ச்சிப் பாதையை நிசான் உருவாக்கி வருகிறது. அதன் ஒருபகுதியாகவே, உலகளாவிய தலைமையக கட்டிடத்தை விற்று, அதிலிலேயே குத்தகைக்கு இருக்க நிசான் முடிவு செய்துள்ளது.

இது குறித்து நிசான் நிறுவனம் கூறுகையில், "சவாலான இந்த காலகட்டத்தில் நிறுவனத்தின் மாற்றத்திற்கு ஆதரவளிக்கும் வகையில், முக்கியமில்லாத சொத்துக்களில் இருந்து மதிப்பைத்திறக்கும் மூலதனத் திறனுக்கான ஒரு ஒழுக்கமான அணுகுமுறையை இந்த நடவடிக்கை பிரதிபலிக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளது. மேலும், இந்த நடவடிக்கை நிறுவனத்தின் புதுமைகளைப் புகுத்துதல், போட்டித்தன்மையுடன் இருத்தல் மற்றும் எதிர்கால வளர்ச்சிக்காக தீவிரமாக ஆராய்ச்சி செய்தல் ஆகிய உத்திகளையும் பிரதிபலிக்கிறது என்றும் நிசான் தெரிவித்துள்ளது.

# தினமும் 2,300 கோடி சம்பளம்

## எலன் மஸ்க்குக்கு காத்திருக்கும் சவால்கள்

தி கோவை ஹெரால்டு




எலான் மஸ்க் சம்பளமே வாங்க மறுப்பவர் என்பது நாம் அறிந்ததே. ஆனால், அவருக்கு டெஸ்லா நிறுவனம் வழங்க ஒப்புதல் அளித்துள்ள சமீபத்திய ஊதியத் திட்டம், வரலாற்றிலேயே மிகப்பெரியது! ஆம், டெஸ்லா பங்குதாரர்கள் கடந்த 6ம் தேதி தலைமைச் செயல் அதிகாரி மஸ்கின் $1 ட்ரில்லியன் (ஒரு லட்சம் கோடி டாலர்) ஊதியத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளனர்.

இந்தவரலாற்றுச்சிறப்புமிக்க முன்மொழிவுக்குச் 75% க்கும் அதிகமான பங்குதாரர்கள் வாக்களித்துள்ளனர். இந்தச் சலுகை நிராகரிக்கப்பட்டால், மஸ்க் நிறுவனத்தை விட்டு வெளியேறக்கூடும் என்ற கவலையை இந்த ஒப்புதல் இப்போது தணித்துள்ளது. இந்த $1 ட்ரில்லியன் ஊதியத் திட்டம் என்பது ரொக்கமாக வழங்கப்படுவதல்ல. இது ஒரு பெரிய பங்கு மானியமாக கட்டமைக்கப்பட்டுள்ளது. இதன் முழுமதிப்பையும்மஸ்க் அடைய வேண்டுமென்றால், டெஸ்லா நிறுவனம் விண்ணை தொடும் அளவுக்குச் சில சவால்களைச் சந்திக்க வேண்டும்.

இந்த $1 ட்ரில்லியன் மதிப்பைப் பெறுவதற்கு, டெஸ்லாவின் சந்தைமூலதனம் தற்போதைய $1.5 ட்ரில்லியன் மதிப்பில் இருந்து, $8.5 ட்ரில்லியன் என்ற வியத்தகு இலக்கை அடைய வேண்டும். இந்த இலக்கை எட்டுவதற்கு, டெஸ்லா பங்குகளின் மதிப்பு, இன்றைய நிலையில் இருந்து 460% அதிகமாக உயர்ந்தாக வேண்டும்!

கடந்த வாரம் $5 ட்ரில்லியன் சந்தை மதிப்பைத் தொட்டு உலகின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனமாக உருவெடுத்த நிவுடியாவைவிட டெஸ்லா சுமார் 70% அதிகமாக மதிப்பிடப்பட வேண்டும்!

இந்த $1 ட்ரில்லியன் மானியத்தைப் பெற, டெஸ்லா நிறுவனம் அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் சில முக்கிய செயல்பாட்டு மற்றும் நிதி இலக்குகளைக் கடந்தாக வேண்டும். ஒவ்வொரு இலக்கையும் மஸ்க் நிறைவேற்றும்போதுதான், இந்த ஊதியமானது 12 சம தவணைகளாக விடுவிக்கப் படும். இந்த 10 ஆண்டு காலப்பகுதியில் அனைத்துத் தவணைகளையும் மஸ்க் வெற்றிகரமாக அடைந்தால், அவரது தினசரி சராசரி வருமானம் சுமார் $275 மில்லியன் (இந்திய மதிப்பில் தோராயமாக ரூ. 2,300 கோடி) ஆக இருக்கும்!

மஸ்க்நிறைவேற்றவேண்டிய 5 முக்கிய இலக்குகள்:

டெஸ்லாவின் சந்தை மூலதனத்தை $1.5 ட்ரில்லியனில் இருந்து $8.5 ட்ரில்லியனாக உயர்த்த வேண்டும். 10 லட்சம் ரோபோடாக்சிகளை அறிமுகப்படுத்த வேண்டும்.

கூடுதலாக 1.2 கோடி வாகனங்களை விற்பனை செய்ய வேண்டும். 1 கோடி ஃபுல் செல்ஃப் டிரைவிங் சந்தாக்களைப் பெற வேண்டும். 10 லட்சம் ஹியூமனாய்டு ரோபோக்களை விற்பனை செய்ய வேண்டும்.

கடந்த 6ம் தேமி ஆஸ்டினில் ங்குதாரர்களிடையே பேசிய மஸ்க், இந்த ஒப்புதலை நிறுவனத்தின் ஒரு திருப்புமுனை தருணம். நாம் தொடங்கவிருப்பது டெஸ்லாவின் எதிர்காலத்தின் ஒரு புதிய அத்தியாயம் மட்டுமல்ல, இது ஒரு முழு புதிய புத்தகம்," என்று அவர் உற்சாகமாகத் தெரிவித்தார்.

Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami. (Note: All the litigations aur within the jurisdiction of Coimbatore courts only.)